Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, NOVEMBER 25, 2022

வெள்ளிக்கிழமை நவம்பர் 25, 2022 | ஒளி: 08 கதிர்: 151 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## மீண்டும் முகக்கவசம் அணிவது கட்டாயம்?



இன்புளுவன்சாவை ஒத்த அறிகுறிகளைக் கொண்ட நோயொன்று நாடு முழுவதும் பரவி வருவதாக எச்சரித்துள்ள சுகாதார அமைச்சு, கொவிட் தொற்று நோயில் இருந்து பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்ட சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறும் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

தமிழகத்துக்குச் சென்ற

## அகதிகளின் எண்ணிக்கை 213 ஆக உயர்வு



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, மன்னாரில் இருந்து படகு மூலம் புறப்பட்ட ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 இலங்கை தமிழர்கள், தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளனர். பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் வந்தவர்களின் எண்ணிக்கை 213 ஆக உயர்வு.

வியட்நாம் அகதி முகாமில்

## இலங்கை அகதி தற்கொலை

கனகராசா சரவணன்

கனடாவுக்கு செல்லும் நோக்கில் தென் சீனக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது மீட்கப்பட்டு வியட்நாமில் அகதிகளாக தங்கவைத்திருந்த ஒருவர் தற்கொலை செய்ய முயற்சித்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக முகாமிலுள்ள இலங்கை அகதி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 37 வயதான நான்கு பிள்ளைகளின் தந்தையான சுந்திரலிங்கம் கிரிதரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இலங்கையைச் சேர்ந்த 303 பேர் கடந்த எட்டாம் திகதி பிலிப்பைன்ஸுக்கும் வியட்நாமுக்கும் இடையே உள்ள கடலில், கப்பலில் தத்தளித்துக் கொண்டிருந்த போது அவர்களை ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் கடற்படையினர் காப்பாற்றி வியட்நாமுக்கு கொண்டுவரப்பட்டு அங்கு தற்காலிக அகதி முகாமில் தங்கவைக்கப்பட்டனர்.

தொடர்ச்சி P2

துமிந்தவுக்கு பொதுமன்னிப்பு வழங்கிய விவகாரம்:

## கோட்டாவை நீதிமன்றில் ஆஜராகுமாறு நோட்டீஸ்



### பிரதிவாதியாக பெயரிடவும் உயர்நீதிமன்றம் அனுமதி

பாரத லக்ஷ்மன் படுகொலை வழக்கில் மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கியமை தொடர்பான விளக்கத்தை சமர்ப்பிப்பதற்காக, டிசெம்பர் 16ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நோட்டீஸ் பிறப்பிக்குமாறு உயர்நீதிமன்றம், நேற்று (24) உத்தரவிட்டது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர மற்றும் அவரது தாயார் சுமனா பிரேமசந்திர மற்றும் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் ஜனாதிபதி சட்டத்தரணி கசாலி ஹுசைன் ஆகியோர்,

தொடர்ச்சி P2

## வன்முறையும் அராஜகமும் மனித உரிமைக்குள் வராது



பா.நிரோஸ்

மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். ஆனால் வன்முறைகளும் அராஜகங்களும் மனித உரிமைக்குள் வராது. இவை மனித உரிமைகளுக்கு எதிரானவை. மனித உரிமைகளைப் பயன்படுத்தி வன்முறைகளில் ஈடுபட முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார். உணவு பாதுகாப்புத் திட்டத்துக்கு இராணுவத்தினரைப் பயன்படுத்த வேண்டுமெனவும் தெரிவித்தார்.

பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, தொழில்நுட்ப அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் நேற்று (24) உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “எனக்கு ஏற்பட்ட நிலைமையே கோட்டாவுக்கும் ஏற்பட்டது”



பா.நிரோஸ்

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் எனக்கு ஏற்பட்ட நிலைமையே, போராட்டக் காலத்தில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சபையில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கப்ராலின் வெளிநாட்டு பயணத்தடை நீட்டிப்பு



இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத்தடையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி வரை நீட்டித்து கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவெல, நேற்று (24) கட்டளை பிறப்பித்தார்.

தொடர்ச்சி P2

## 13ஐ அடிப்படையாகக்கொண்ட அதிகாரப்பகிர்வுக்கு தயார்



பா.நிரோஸ்

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக 13 ஆவது திருத்தத்தில் உள்ளவாறு அதிகார பகிர்வை வழங்குவதற்கு பூரணமாக தாம் இணங்குவதாக தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு தலைமைத்துவம் வழங்குவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

எனது மாதாந்த சம்பளம்

## 4 இலட்சம் ரூபாய் மட்டுமே!

### ஓய்வூதியக் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள மாட்டேன்



சர்வதேச நாணய நிதியத்தின் கொடுப்பனவுகளையும் மத்திய வங்கியால் 25 இலட்சம் ரூபாய் கொடுப்பனவையும் பெற்றுக்கொள்கிறேன் என கூறப்படும் குற்றச்சாட்டு முற்றுமுழுதாக பொய்யானது. எனது மாதாந்த கொடுப்பனவு நான்கு இலட்சம் ரூபாய் மட்டுமே என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கோட்டாவுக்காகவே 21/4 தாக்குதல்



கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக தேர்ந்தெடுப்பதற்காக 2019 ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டதாக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று (24) கருத்து தெரிவித்த அவர், தாக்குதல்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பொறுப்பேற்க வேண்டும் என சிலர் கோரிக்கை விடுக்கின்றனர். அந்த குற்றச்சாட்டுகளை தான் நம்புவதாகவும் தெரிவித்தார். எனினும், இந்த விடயத்தில் நீதிமன்றம் விரைவில் முடிவு செய்யும் என்றார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை அரசியல் ஆதாயத்துக்காக பயன்படுத்திக்கொள்வதற்கு ராஜபக்ஷ குழாம் முயல்கின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

ஓமானில் பாலியல் துஷ்பிரயோகம்

## இலங்கை அதிகாரியை உடனடியாக அனுப்பவும்

### ஓமானிலுள்ள இலங்கை தூதரகத்துக்கு அறிவிப்பு

இலங்கை பெண்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கை தூதரகத்தின் 3ஆவது செயலாளரை உடனடியான இலங்கைக்கு திருப்பி அனுப்புமாறு, ஓமானில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



இலங்கையை

## பிச்சை பெறும் நாடாக மாற்றத் தயாரில்லை

நாட்டின் நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்காக வங்கி முறையை வலுப்படுத்தும் முறையான வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மத்திய கிழக்கு நாடுகளுக்கு

## வருகை விசாவில் பயணிக்க வேண்டாம்



வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வருகை (விசிட்) விசாவில் பயணிக்க வேண்டாம் என்று மக்களுக்கு அறிவுறுத்திய வெளிவிவகார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, முறையான வேலை வாய்ப்பு மற்றும் வேலை விசா பெற்று அந்த நாடுகளுக்கு செல்லுமாறு அறிவுறுத்தினார்.

தொடர்ச்சி P2

சிங்கள இளைஞர்களை

## கொலை செய்ய ஜனாதிபதி தயாராகிறார்



பா.நிரோஸ்

“அன்பார்ந்த சிங்கள மக்களே! சிங்கள இளைஞர்களே! உங்களை எல்லாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொலை செய்யப்போகிறார். உங்களை கொலை செய்வதற்கான வாசலை ரணில் திறந்து வைத்துள்ளார்” என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## கோட்டாவை நீதிமன்றில் ஆஜராகுமாறு நோட்டீஸ்

பொது மன்னிப்பு வழங்கியமையை சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்களை பரிசீலித்த போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த மனுக்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பிரதிவாதியாக பெயரிட மனுதாரர்களின் சட்டத்தரணிகள் முன்னர் அனுமதி கோரியிருந்தனர். உயர்நீதிமன்ற நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ மற்றும் யசந்த கோதாகொட ஆகியரோடங்கிய குழாம் முன்னிலையில் மனுக்கள் நேற்று (24) பரிசீலிக்கப்பட்ட போது, கோட்டாபய ராஜபக்ஷவை சம்பந்தப்பட்ட மனுக்களில் பிரதிவாதியாக பெயரிட அனுமதி வழங்கப்பட்டது.

மேலும், மிரிஹானவில் உள்ள கோட்டாபய ராஜபக்ஷவின் பிரத்தியேக இல்லத்துக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டதாகவும் ஏற்றுக்கொள்ள மறுக்கப்பட்டுவிட்டது என்ற குறிப்புடன் நோட்டீஸ் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் சுமனா பிரேமச்சந்திர சார்பில் ஆஜரான சட்டத்தரணி எராஜ் டி சில்வா மன்றுக்கு தெரியப்படுத்தினார். இதனையடுத்து, டிசெம்பர் 16ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்ட நீதியரசர்கள் குழாம், மனுக்கள் மீதான மேலதிக பரிசீலனை அன்றையதினம் இடம்பெறும் எனவும் அறிவித்தது.

## எனக்கு ஏற்பட்ட நிலைமையே...

பாராளுமன்றத்தில் நேற்று (24) 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம், பாராளுமன்றம் உள்ளிட்ட 16 விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்து நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.2019 ஆம் ஆண்டில் தேசிய பாதுகாப்பு தொடர்பில் கூறிக்கொண்டே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. தேசிய பாதுகாப்புக்காகவே கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதாக கூறினர். எனது காலத்தில் ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் நடந்தது. அது வெளிநாட்டு ஐஎஸ் அமைப்பினால் செய்யப்பட்டது. அதனை அரசியல் நோக்கத்திற்காக எனது தலையில் போட்டனர். ஆனால் எனக்கு எவரும் தகவல் கூறியிருக்கவில்லை. பாதுகாப்பு அமைச்சரான எனக்கு அந்தத் தகவல்களை கூறியிருக்கவில்லை. இந்நிலையில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இதேபோன்ற நிலைமை ஏற்பட்டது. அவர் நாட்டை விட்டு செல்ல இருந்த தினத்தில் குறைந்தளவானவர்களே போராட்டத்திற்கு வருவார்கள் என்று அவரின் பாதுகாப்பு பிரிவினர் கூறியிருந்தனர். ஆனால் அன்றைய தினத்தில் 4 இலட்சம் வரையில் மக்கள் கொழும்புக்கு வந்திருந்தனர். இறுதியில் ஜனாதிபதியினால் பதவி விலக நேரிட்டதுடன், பிரதமருக்கு மறைந்து இருக்க வேண்டியேற்பட்டது.இதனால் பாதுகாப்பு தரப்பினருக்கு அதிகளவில் நிதி ஒதுக்குவது முக்கியமல்ல. பாதுகாப்பு பிரிவை முழுமையாக மறுசீரமைப்பை செய்ய வேண்டும் என்றார்.

## 4 இலட்சம் ரூபாய் மட்டுமே

மத்திய வங்கியினால் நேற்று (24) நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

எனக்கு சர்வதேச நாணய நிதியத்தின் மூலமாக எந்தவிர கொடுப்பனவுகளும் கிடைப்பதில்லை. நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தியே சர்வதேச நாணய நிதியத்தில் சிறிது காலம் பணியாற்றினேன். அனைவருக்கும் கிடைத்த கொடுப்பனவே எனக்கும் அக்காலத்தில் கிடைத்தது. அதனைத் தாண்டி ஓய்வூதிய கொடுப்பனவுகள் எனக்கு கிடைக்கவில்லை. அதேபோல் மத்திய வங்கியினால் 25 இலட்சம் ருபாய் கொடுப்பனவு எனக்கு கிடைப்பதாக கூறுவதும் பொய்யான குற்றச்சாட்டாகும். இதுவரை காலமாக கடமையாற்றிய மத்திய வங்கியின் ஆளுநர்களுக்கு கிடைக்கும் சலுகைகளும் கொடுப்பனவுமே எனக்கும் கிடைக்கின்றது. மத்திய வங்கியின் ஆளுநராக மாதாந்தம் 4 இலட்சம் ரூபாய் கொடுப்பனவே எனக்கு கிடைக்கின்றது.

முன்னாள் ஆளுநர்களின் காலத்தில் ஒருவருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவே கிடைத்தது. இறுதியாக கடமையாற்றிய ஆளுநர் கொடுப்பனவுகளை அதிகரித்துக்கொண்டு, அமைச்சரவை அமைச்சருக்கான அதிகாரங்களையும் பெற்றுக்கொண்டு, பாதுகாப்பை அதிகரித்துக்கொண்டார். அதற்கமைய எனக்கு 4 இலட்சம் ரூபாய் கிடைக்கின்றது. அதற்கு மேலதிகமாக முன்னாள் ஆளுநருக்கு கிடைத்த எதனையும் நான் பெற்றுக்கொள்ளவில்லை. அதேபோல் ஓய்வூதிய கொடுப்பனவுகளை பெற்றுகொள்ள தயாரில்லை. எனினும் முன்னாள் ஆளுநருக்கு ஓய்வூதிய கொடுப்பனவுகள் கிடைத்து வருகின்றது என்றார்.

## பிச்சை பெறும் நாடாக...

இலங்கையை பிச்சை பெறும் நாடாக மாற்றுவதற்கு தாம் எந்த வகையிலும் தயாரில்லை என வலியுறுத்திய ஜனாதிபதி, இலங்கையர்களாகிய நாம் சுய முயற்சியில் எழுந்து நிற்க வேண்டும் எனவும், அதற்குத் தேவையான வேலைத்திட்டத்தை இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் முன்வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மறைந்த அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் 86ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (23) நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார். இலங்கையை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்தக்கூடிய எண்ணக்கருவை லலித் அத்துலத்முதலி கொண்டிருந்ததாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்காலத்தில் பட்டப்பின்படிப்பை தொடரக் கூடிய வகையில் லலித் அத்துலத்முதலியின் பெயரில் பல்கலைக்கழகம் ஒன்றை இலங்கையில் நிறுவவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## வருகை விசாவில் பயணிக்க...

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் சென்று சிக்கித் தவிக்கும் இலங்கை பணியாளர்களை அந்த நாடுகளில் இருந்து அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை நிராகரித்தார்.

புலம்பெயர் பணியாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து வெளிவிவகார அமைச்சும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமும் கலந்துரையாடி வருவதாக குறிப்பிட்டார். ஓமான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இலங்கை புலம்பெயர்ந்த பணியாளர்கள் பலர் நாட்டுக்கு திரும்பிவருவதற்கு விரும்பவில்லை என்றார்.

டுபாய் மற்றும் ஓமான் ஆகிய நாடுக வருகை விசா மூலம் நுழைந்து வேலை கிடைத்த பின்னர் அதை வேலை விசாவாக மாற்ற அனுமதிக்கும் வகையில் தங்கள் சட்டங்களை தளர்த்தியுள்ளன என்று சுட்டிக்காட்டிய அவர், எனினும், முறையான வேலை விசா பெற்று அந்த நாடுகளுக்கு பயணிக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தினார்.

## பாடசாலைகளுக்குள் அரசியல் வேண்டாம்
### கல்விச் செயலாளருக்கு அமைச்சர் சுசில் உத்தரவு

அரசியல் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை பாடசாலைகளுக்குள் நடத்த அனுமதிக்க வேண்டாம் என்று அனைத்து பாடசாலைகளின் அதிபர்களுக்கும் கடிதம் மூலம் அறிவிக்குமாறு, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பொலன்னறுவை, மொரட்டுவ, நவகமுவ மற்றும் அதுருகிரிய ஆகிய நான்கு மாகாண பாடசாலைகளில் முன்னணி சோசலிச கட்சியின் அரசியல் செயற்பாட்டாளர்கள் குழுவொன்றினால், மாணவர்களுக்கான கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

இதனையடுத்தே அமைச்சரினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் அதிபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

மாகாண சபைகளின் கீழ் இயங்கும் மேற்குறிப்பிட்ட நான்கு பாடசாலைகளின் அதிபர்களும் மாணவர்களுக்கான கருத்தரங்கை நடத்துவதற்கு கட்சியின் செயற்பாட்டாளர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## வன்முறையும், அராஜகமும் மனித உரிமைக்குள் அல்ல

இராணுவத்தினருக்கான நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சிலர் கூறுகிறார்கள். 24 மணித்தியாலங்களில் இந்த நிதியை இராணுவத்தால் செலவிட முடியாது. இராணுவ வீரர்கள் எண்ணிக்கை குறைவடைந்திருந்தால் பதவி உயர்வுப் பெற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனவே அவர்களின் பதவி நிலைக்கு ஏற்ப அவர்களுக்கு சம்பளத்தை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட காரணங்களால் இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீடுகள் அதிகரித்திருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்புத் திட்டத்துக்கு இராணுவத்தினரைப் பயன்படுத்த வேண்டுமென நான் ஆலோசனை வழங்கியுள்ளேன். நாட்டில் வீதிக்கு இறங்கி ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் போது அதனை இராணுவத்தினரால் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது எனவும் தெரிவித்தார். மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே எனது விருப்பமும். ஆனால் வன்முறைகளும், அராஜாகங்களும் மனித உரிமைக்குள் வராது. இது மனித உரிமைகளுக்கு எதிரானது. மனித உரிமைகளைப் பயன்படுத்தி வன்முறைகளில் ஈடுபட முடியாது. மனித உரிமைகள் எனக் கூறி வன்முறையில் ஈடுபட்டவர்களை பாதுகாக்கவும் முடியாது எனவும் தெரிவித்தார். மனித உரிமை பாதுகாப்பாளர்கள் எனக் கூறிக்கொண்டு சிலர் என்ன செய்கிறார்கள் என்பது தெரியவில்லை. இவர்கள் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் பணத்துக்காக தங்களை மனித உரிமை பாதுகாவலர்கள் என கூறுகிறார்கள் என்றார்.

## கப்ராலின் வெளிநாட்டு பயணத்தடை நீட்டிப்பு

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரின் தீர்மானங்களினால் நாட்டில் தற்போதைய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறி கீர்த்தி தென்னகோன் அவருக்கு எதிராக தனிப்பட்ட முறைப்பாடு செய்திருந்தார். முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலின் சட்டத்தரணி வழக்கை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்று அறிவித்ததுடன், இந்த வழக்கு தொடர்பான அடிப்படை ஆட்சேபனைகளை தாக்கல் செய்திருந்தார்.

2005 ஆம் ஆண்டு முதல் 2015 வரை மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவார்ட் கப்ரால் செயற்பட்ட காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்துக்கு, 10.4 முதல் 10.6 பில்லியன் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக முறைப்பாட்டாளர் குறிப்பிட்டுள்ளார். குற்றவியல் நம்பிக்கை மீறலுக்காக தண்டனைச் சட்டத்தின் 388ஆவது பிரிவின் கீழ் கப்ரால் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்ததாகவும் பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பத்திரங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்ததற்கு முன்னாள் ஆளுநரும் பொறுப்பு எனவும் முறைப்பாட்டாளர் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை அதிகாரியை உடனடியாக அனுப்பவும்

குறித்த அதிகாரியை பணி இடைநிறுத்தம் செய்துள்ளதாகவும் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

அவர் எப்போது அனுப்பப்படுவார் என்று அறிவிக்கப்படவில்லை என்று பணியகம் தெரிவித்துள்ள நிலையில், அந்த அதிகாரியை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜர்படுத்துமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து அபுதாபி ஊடாக ஓமானுக்கு இலங்கைப் பெண்கள் கடத்தப்பட்டு ஏலம் விடப்பட்டு பாலியல் அடிமைகளாக விற்கப்படுவதாக செய்தி வெளியானதுடன், குறித்த அதிகாரி இலங்கைப் பெண்களிடம் தொடர்ச்சியாக பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கொலை செய்ய ஜனாதிபதி...

அதிகளவான நிதியை இராணுவத்துக்கு ஒதுக்கிய நாடு என்கிற சாதனையை இலங்கை படைத்துள்ளது. படைகளுக்கு ஜனாதிபதி அதிகாரங்களை வழங்கியுள்ளார். தமிழ் மக்களை கொலை செய்த படைகள், தற்போது சிங்கள மக்களை, சிங்கள இளைஞர்களை கொலை செய்வதற்காக பகிரங்கமான ஆணையை வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வழங்கியிருக்கிறார் என்றார்.

தற்போதைய ஜனாதிபதி ஜே.வி.பியினர் படுகொலை செய்ய வதை முகாம்களை வைத்திருந்தவர். அன்பார்ந்த சிங்கள இளைஞர்களே உங்களை இந்த ஜனாதிபதி கொலை செய்யப்போகிறார். கொலைக்கான வாசலை அவர் திறந்துள்ளார். ஜனாதிபதி ஆயுதப் படைகளை வைத்து மிக மோசமான இராணுவ வன்முறைகளை கட்டவீழ்த்து விடப்போகிறார் என்பதை சொல்கிறது. நாடு மோசமான நிலைக்கு செல்கிறது. சர்வதேச நாடுகளும் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

மயிலிட்டியில் இராணுவம் கைப்பற்றிய காணிகளை விவசாயம் செய்கிறது. ஏன் இதனை மக்களுக்கு வழங்க முடியாது? உள்நாட்டிலும் தமிழ் மக்கள் அகதிகளாக இருக்கிறார்கள் என்பதை ஏன் இன்னும் நம்பத்தயாராக இல்லை? எனவும் கேள்வி எழுப்பினார். தமிழர்களின் இடங்கள் பல ஆக்கிரமிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. தமிழர்கள் விடயத்தில் விஞ்ஞானப்பூர்வமாக, சமாதானம் பற்றி சிந்திக்க வேண்டும். அவ்வாறு சிந்தனை மாற்றம் வரும்போது நாம் உங்களுடன் ஒன்றிணைந்து பயணிக்க தயாராக இருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

## மீண்டும் முகக்கவசம்...

தற்போதைய காலநிலை மாற்றம் மற்றும் மக்களின் வாழ்க்கை முறை காரணமாக இந்த நோய் பரவிவருவதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டார்.

இருமல், சளி, காய்ச்சல் ஆகிய அறிகுறிகளுடன் கூடிய குறித்த நோய் பரவக்கூடியது என்றாலும், கொவிட் நோயை விட சற்று சிக்கல் குறைந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். எனவே, கொவிட் தொற்று நோயில் இருந்து பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்ட சுகாதார நடைமுறைகள் இந்த நோயில் இருந்தும் தங்களைப் பாதுகாக்க ஏற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறும் நிலைமை தீவிரமடைந்தால் மாத்திரம் வைத்திய ஆலோசனையைப் பின்பற்றுமாறும் அவர் குறிப்பிட்டார். முகக் கவசங்களை அணிதல், நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்களின் நெருங்கிய தொடர்பைத் தவிர்த்தல் மற்றும் அறிகுறிகள் அல்லது நோய்வாய்ப்பட்டிருந்தால் வீட்டில் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அடிக்கடி கைகளைச் சவர்க்காரமிட்டு அல்லது தொற்று நீக்கிகளைக் கொண்டு சுத்தம் செய்யுமாறும் கண்கள், மூக்கு, வாயை அடிக்கடி தொடுவதைத் தவிர்க்குமாறும் குறிப்பிட்டுள்ள சுகாதார அமைச்சு, ஆரோக்கியமான பழக்க வழக்கங்களைக் கடைபிடிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.

## இலங்கை அகதி...

இந்த நிலையில் இலங்கைக்கு செல்ல முடியாது என கோரி, கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரு இலங்கை அகதிகள் தற்கொலை செய்ய முயற்சித்திருந்த நிலையில் அவர்களை காப்பாற்றி அந்த நாட்டிலுள்ள வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. இதனை தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த ஒருவரே, இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் சடலம் தொடர்ந்தும் அந்த நாட்டு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சடலத்தை மீள வழங்குவதற்கு அந்த நாட்டு அதிகாரிகள் பாரிய தொகையொன்றை கோரி வருவதாகவும் வியட்நாம்மிலுள்ள இலங்கை அகதியொருவர் தெரிவித்தார்.

## 13ஐ அடிப்படையாகக்கொண்ட...

அதிகார பகிர்வு விடயத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை ஜனாதிபதி கோரியிருந்த நிலையில், அது தொடர்பில் நேற்று(24) பாராளுமன்றத்தில் அறிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு கூறியுள்ளார்.

13 ஆவது திருத்தம் தொடர்பில் ஒவ்வொருவரிடமும் ஜனாதிபதி கேட்டார். ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் அதற்கு இணங்குகின்றது. நாங்கள் ஒருபோதும் 13க்கு அப்பால், 13க்கு கீழ் என்று கூறியது கிடையாது. மொட்டுக் கட்சியின் குழுவினரே வெளிநாட்டில் 13க்கு அப்பால் என்றும், உள்நாட்டில் 13க்கு கீழ் என்றும் கதைப்பார்கள். ஆனால் நாங்கள் உறுதியான நிலைப்பாட்டில் இருக்கின்றோம். அதாவது 13 ஆவது திருத்தத்தில் உள்ளவாறு அதிகார பகிர்வுக்கு நாங்கள் இணங்குகின்றோம். இந்த நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். அரசியல் வரப்பிரசாதங்களுக்காக எமது கொள்கைகளை காட்டிக்கொடுக்கவும் மாட்டோம்.

வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் விசேட சர்வகட்சி கூட்டத்தை நடத்தி சுதந்திர தினத்திற்கு முன்னர் வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் இறுதித் தீர்மானத்திற்கு வருவதாக ஜனாதிபதி கூறியுள்ளார். ஒரே நாட்டுக்குள், பிளவுப்படாத நாட்டுக்குள், ஒருமைப்பாட்டை பாதுகாத்து, இறைமையை பாதுகாத்து செய்யும் அதிகார பகிர்வுக்கு நாங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம். கூறியாவறு சுதந்திர தினத்திற்கு முன்னர் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்தப் பிரச்சினையை தீர்ப்போம். இதற்கு தேவையான ஒத்துழைப்பு மற்றும் தலைமைத்துவத்தை வழங்குவதற்கு நாங்கள் தயார் என்றார்.

5 கிராமுக்கு மேல்

## ஐஸ் வைத்திருந்தால் மரண தண்டனை

ஐஸ் என்றழைக்கப்படும் கிறிஸ்டல் மெத்தம்பெட்டமைன் எனும் போதைப் பொருளை 5 கிராம் அல்லது அதற்கு மேல் வைத்திருக்கும் அல்லது விற்பனை செய்யும் எவருக்கும் மரண தண்டனை அல்லது ஆயுள்தண்டனை விதிப்பதற்கான அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (23) முதல் அமுலாகும் 2022 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் (திருத்தம்) சட்டத்தின் கீழ் குற்றம் நிரூபிக்கப்பட்ட நபருக்கு மரணதண்டனை விதிக்கப்படும் என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் விவகார இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன சுட்டிக்காட்டியுள்ளார். 5 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் பாடசாலை மாணவர்கள் பிடிக்கப்பட்டால் அவர்கள் தடுப்பு மையங்களுக்கு அனுப்பப்படலாம் என்று குறிப்பிட்ட அவர், எனினும் உயர் நீதிமன்றமே தீர்மானத்தை எடுக்கும் என்றார். ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர், எதிர்கால சந்ததியினரை பாதுகாப்பதற்காகவும், நாட்டை சரியான பாதையில் செலுத்துவதற்காகவும் இந்த திருத்தங்கள் கொண்டுவரப்பட்டதாக சுட்டிக்காட்டினார். முன்னர் ஹெரோய்னுக்கு மட்டுமே சட்டம் அமுல்படுத்தப்பட்டதாக குறிப்பிட்ட அவர், இதுவரை மொத்தம் 26,000 பேர் சிறையில் உள்ளனர் என்றும் குறிப்பிட்டார். இதேவேளை, 2017ஆம் ஆண்டு ஐஸ் வைத்திருந்த குற்றத்துக்காக 6 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டதாகவும் எனினும், 2021 ஆம் ஆண்டில் அந்த தொகை 225 மடங்காக அதிகரித்து, 13,720 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை குறிப்பிட்டுள்ளது. 22 வயது முதல் 26 வயதுக்குட்பட்ட தரப்பினரே இந்த போதைப் பொருளுக்கு அதிகளவில் அடிமையாகியுள்ளனர் என்றும் சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

# தேசிய பாதுகாப்புக்கு நிதி ஒதுக்கீடு அவசியம்



இராணுவ நிர்வாகத்துக்கான செலவு நாளாந்தம் அதிகரித்து செல்லுமே தவிர குறைவடையாது. நாட்டில் யுத்தம் இல்லை என்பதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி ஒதுக்காமல் இருக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியும் முன்னாள் இராணுவத்தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாட்டில் யுத்தம் இல்லை ஆகவே பாதுகாப்பு துறைக்கு அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை கிடையாது என ஒரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். நாட்டில் யுத்தம் இல்லை என்பதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி ஒதுக்காமல் இருக்க முடியாது. முன்னறிவிப்பு விடுத்ததன் பின்னர் நாட்டில் பாதிப்பு ஏற்படாது. ஆகவே பாதுகாப்பு துறை எந்நிலையிலும் அவதானத்துடனும், முன்னேற்றகரமாகவும் காணப்பட வேண்டும். அனர்த்தம் ஒன்று நேர்ந்ததன் பின்னர் பாதுகாப்பு படையினரை பலப்படுத்த அவதானம் செலுத்த முடியாது.

யுத்த காலத்திற்கு முன்னர் 11 ஆயிரம் இராணுவத்தினரே இருந்தனர். விடுதலைப் புலிகள் அமைப்பு படை பலத்தில் முன்னேற்றமடைந்து செல்வதை கண்டே, இராணுவத்தை பலப்படுத்தினோம். விடுதலை புலிகளின் யுத்த உபகரணங்களை அறிந்ததன் பின்னரே இராணுவத்திற்கு பாதுகாப்பு உபரணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வாறான நிலையில் தான் யுத்தம் 30 வருட காலம் நீண்டு சென்றது.

எமது விருப்பத்துடன் இந்திய இராணுவம் இலங்கைக்கு வருகை தரவில்லை. இந்திய படைகளை எம்மால் தடுக்கவும் முடியவில்லை. ஆனால் தற்போது நிலைமை மாற்றமடைந்துள்ளது. நாட்டை இல்லாதொழிக்க இராணுவத்தினரும், பாதுகாப்பு தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவில்லை. நாட்டை பாதுகாக்க இராணுவத்தினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளனர்கள் என்றார்.

# போராட்டத்தை அடக்க இடமளிக்க மாட்டோம்



மக்கள் போராட்டத்தை அவசரகால சட்டம் மற்றும் இராணுவத்தை பயன்படுத்தி அடக்குவதற்கு இடமளிக்க மாட்டோம் என்பதுடன், நியாயமான போராட்டத்திற்கு தேவையான தலைமைத்துவத்தை வழங்குவோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (24) இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆகியவற்றின் மீதான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

> **நியாயமான மக்கள் போராட்டத்திற்கு நாங்கள் பலத்தை வழங்கி, தலைமைத்துவத்தைதயும் வழங்குவோம். அதனை நிறுத்த எவராலும் முடியாது. ஆனால் கொலை, கொள்ளை, அரச சொத்துகளை சேதப்படுத்துபவர்களுக்கு எதிராக பாதுகாப்பு தரப்பினர் நடவடிக்கை எடுக்கலாம்**

ஜனாதிபதி தெரிவித்துள்ள விடயத்தால் மக்கள் விரக்தியடைந்துள்ளனர். அவர்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர். அந்த மாற்றம் அமைதியான ஜனநாயக முறையில் நடக்க வேண்டும் என்றே நாங்கள் கருதுகின்றோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்றியுடையவராக இருந்திருந்தால் அவர் மக்களின் போராட்டத்திற்கு நன்றி கூற வேண்டும். அவர் இந்தப் பதவிக்கு வர மக்கள் போராட்டமே காரணமாக அமைந்துள்ளது. ஆனால் மக்கள் போராட்டத்தை அவசரகால சட்டம், இராணுவத்தை பயன்படுத்தி அடக்குவேன் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். அதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம். நியாயமான மக்கள் போராட்டத்திற்கு நாங்கள் பலத்தை வழங்கி, தலைமைத்துவத்தைதயும் வழங்குவோம். அதனை நிறுத்த எவருக்கும் முடியாது. ஆனால் கொலை, கொள்ளை, அரச சொத்துக்களை சேதப்படுத்துபவர்களுக்கு எதிராக பாதுகாப்பு தரப்பினர் நடவடிக்கை எடுக்கலாம். எவ்வாறாயினும் இந்த நாட்டில் ஊழல் மோசடிகளுக்கு காரணமாக குடும்பத்திற்கு எதிரான போராட்டத்தை நிறுத்துவதற்கு எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என்றார்.

# இராணுவத்தின் தேவைக்காகவே ஆட்சியாளர்கள் செயற்படுகின்றனர்



இராணுவத்தினரின் தேவைக்காக செயற்படும் ஆட்சியாளர்களே உள்ளனர் மாறாக இராணுவத்திற்கு கட்டளையிடும் நிலையில் ஆட்சியாளர்கள் இல்லை எனத் தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான சார்ள்ஸ் நிர்மலநாதன், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கோட்டாபய ராஜபக்‌ஷ கடற்படை முகாம் சிங்கள குடியேற்றத்தை துரிதப்படுத்தும் என்ற அச்ச நிலை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

> **முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கோட்டாபய ராஜபக்‌ஷ கடற்படை முகாம் சிங்கள குடியேற்றத்தை துரிதப்படுத்தும் என்ற அச்ச நிலை தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகிறது. இராணுவத்தினர் வசமுள்ள தமிழர்களின் பூர்வீக காணிகள் முறையாக விடுவிக்கப்பட வேண்டும்**

இலங்கை வங்குரோத்து நிலை அடைந்துள்ள நிலையில் பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரச நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டு, நலன்புரி சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டு, அபிவிருத்தி பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. ஆனால் பாதுகாப்பு துறைக்கு மாத்திரம் தற்போது அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு 373.05 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு மாத்திரம் 410 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை சிறந்த செயற்பாடல்ல.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னரான காலப்பகுதியிலும் வடக்கு மாகாணத்தில் பெரும்பாலான காணிகள் இராணுவத்தினர் கட்டுப்பாட்டில் உள்ளது. யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் மாத்திரம் இராணுவத்தினர் 1500 ஏக்கர் காணிகளை தம்வசப்படுத்திக் கொண்டுள்ளார்கள். முல்லைத்தீவு மாவட்டத்தில் கோட்டாபய ராஜபக்‌ஷ கடற்படை முகாமை அமைப்பதற்கு 671 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்த 671 ஏக்கர் காணிகள் தமிழ் மக்களின் பூர்விக காணிகளும் உள்ளடங்குகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கோட்டாபய ராஜபக்‌ஷ கடற்படை முகாம் சிங்கள குடியேற்றத்தை துரிதப்படுத்தும் என்ற அச்ச நிலை தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகிறது, இராணுவத்தினர் வசமுள்ள தமிழர்களின் பூர்வீக காணிகளை முறையாக விடுவிக்கப்பட வேண்டும் என்றார்.



# பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளரை பதவி நீக்க வேண்டும்

பசில் ராஜபக்‌ஷவை வரவேற்பதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்ற பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளரை உடனடியாக பாதவியிலிந்து விலக்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

> **எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணிலுக்கு உள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மையும் இல்லாது போகும்**

ஜனாதிபதிக்கான இரகசிய வாக்கெடுப்பின்போது ரணிலுக்கு 134 வாக்குகள் கிடைத்தன. எனினும் வரவு செலவு திட்டம் மீதான வாக்கிடுப்பின் போது 121வாக்களே கிடைத்தன. 13 வாக்குகள் குறைவடைந்துள்ளன. எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணிலுக்கு உள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மையும் இல்லாது போகும் எனவும் தெரிவித்தார்.

பொலிஸ் திணைக்களம் எவ்வாறு அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்பதை பொலிஸ்மா அதிபரே கூறியிருக்கிறார். பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளராக சந்திரா பெர்ணான்டோ என்கிற மொட்டுக் கட்சியின் ஆதரவாளர் நியமிக்கப்பட்டுள்ளார். ஊழல் குற்றச்சாட்டுக்களை கொண்ட, அமைச்சுப் பதவியிலிருந்து விலகிய பசில் ராஜபக்‌ஷவை வரவேற்பதற்காக பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளர் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றுள்ளார். எனவே இவரை உடனடியாகப் அந்தப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## பயிலுநர் பட்டதாரிகளை ஆசிரியர் பணிக்கு இணைத்துக்கொள்ளும்

# பொதுப் பரீட்சை டிசெம்பர் நடுப்பகுதியில்



தற்போது அரச சேவையில் உள்ள பயிலுநர் பட்டதாரிகளை ஆசிரியர் பணிக்கு இணைத்துக் கொள்வதற்கான பொதுப் பரீட்சை டிசம்பர் மாத நடுப்பகுதியில் நடத்தப்படும். 26,000 ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். அத்துடன் ஆசிரியர் பணிக்கான ஆட்சேர்ப்பு முறையில் சில மாற்றங்கள் செய்யப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி எம்.பியான தயாசிறி ஜயசேகர ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பி நிரந்தர நியமனம் கிடைக்காததால் விரக்தியடைந்த ஆசிரியர் ஒருவர் 25 பனடோல் மாத்திரைகளை உட்கொண்டு ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் எனவே ஆசிரியர் நியமனம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுமாறும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளிக்கும்போதே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத்தெரிவித்ததுடன் மேலும் கூறுகையில், ஆசிரியர் பணிக்கான ஆட்சேர்ப்பு முறையில் சில மாற்றங்கள் செய்யப்படவுள்ளன . நாங்கள் ஆசிரியர் பணிக்கு ஆட்சேர்ப்பு செய்து, 19 பீடங்களை இணைத்து தேசிய கல்விப் பல்கலைக்கழகத்தை உருவாக்கவுள்ளோம்.4 ஆண்டுகள் பட்டப்படிப்பு மற்றும் ஆசிரியர் பயிற்சிக்குப் பின்னர் ஒரு தரமான ஆசிரியர் வகுப்புக்கு அனுப்பப்படுவார்.

தற்போது அரச சேவையில் உள்ள பயிலுநர் பட்டதாரிகளை ஆசிரியர் பணிக்கு இணைத்துக் கொள்வதற்கான பொதுப் பரீட்சை டிசெம்பர் மாத நடுப்பகுதியில் நடத்தப்படும். 26,000 ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். பொதுப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகள் மூலம் உரிய ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

# அதிகார பகிர்வுக்கு இடமில்லை



நாட்டில் அதிகார பகிர்வுக்கு ஒருபோதும் இடமளிக்க போவதில்லை, நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க சிங்கள இனம் வரலாற்றில் இருந்து செய்த உயிர் தியாகத்தை ஒவ்வோர் இனத்தின் தேவைக்காகவும், ஒருசிலரின் தேவைக்காகவும் விட்டுக் கொடுத்து நாட்டை பிளவுப்படுத்த முடியாது. இலங்கையர்கள் என்ற அடிப்படையில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படலாம் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார். இராணுவத்தினரது தியாகத்தினால் நாடு இன்று அமைதியாக உள்ளது என்பதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இராணுவத்திற்கு ஒதுக்கும் நிதி அபிவிருத்தி மற்றும் தேசிய பாதுகாப்பிற்கான முதலீடு என கருத வேண்டும்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் அதிகார பகிர்வு தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று (நேற்று முன்தினம்) அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அதிகார பகிர்வுக்கு ஒருபோதும் இடமளிக்க போவதில்லை. அதிகார பரவலாக்கம் குறித்து அவதானம் செலுத்தலாம். ஒற்றையாட்சி நாட்டில் அதிகார பகிர்வுக்கு இடமில்லை. சமஷ்டியாட்சி நாடுகளில் மாத்திரம் தான் அதிகார பகிர்வு சாத்தியமாகும். நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க சிங்கள இனம் உயிர் தியாகம் செய்துள்ளது.சோழர்,பாண்டியயன் மற்றும் ஆங்கிலேயர்களிடம் இருந்து பாதுகாக்க சிங்களவர்கள் போராடினார்கள் என்றார்.



## கோட்டாவுக்கு நடந்ததை

# ரணில் நினைவில் கொள்ள வேண்டும்

சர்வாதிகாரி ஹிட்லர் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசுகிறார். ஆனால், ஹிட்லர் என கூறப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, மக்களின் எதிர்ப்பால் தப்பியோடினார் என்பதை ஜனாதிபதி நினைவில் கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் ஹப்புகாமி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் நேற்று (23) ஆற்றிய உரை ஆபத்தானது. கடந்த காலங்களில் கோட்டா என்கிற சர்வாதிகாரிக்கு எதிரான போராட்டங்களின் போது எமக்குத் தலைமை தாங்கிய ரணில் விக்கிரமசிங்கவே, இப்போது சர்வாதிகாரி தொடர்பிலும், ஹிட்லர் தொடர்பிலும் பேசுகிறார். ஆனால், மக்கள் வந்ததும் ஹிட்லர் போல இருந்த கோட்டா தப்பியோடினார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்றார்.

நாட்டு மக்களுக்கு காணப்பட்ட பிரச்சினைகளால் கோட்டா ஜனாதிபதி பதவியிலிருந்து மக்களால் விரட்டியடிக்கப்பட்டார் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். அனைத்து நாட்டு மக்களையும் பிரதிநித்துவப்படுத்தும் வீரர்களே இராணுவத்தில் இருக்கிறார்கள். நாட்டு மக்கள் பட்டிணியில் இருக்கிறார்கள் என்பதை இராணுவ வீரர்களும் உணர்ந்துள்ளனர். இவ்வாறான நிலையில் பட்டிணியில் உள்ளவர்களை சுட்டுக்கொள்வாரர்களா? இதுபோன்ற விடயங்கள் இலங்கையில் நடக்காது எனவும் தெரிவித்தார். அவசரக்காலச் சட்டம், இராணுவம் தொடர்பில் ஜனாதிபதி பேசுகிறார். இவை அனைத்தும் மொட்டுக் கட்சியின் கொள்கைகளே. எனவே, வரவு செலவு திட்டத்தில் காகம் மோதியதா? என்பது தெரியவில்லை.

உள்ளூராட்சி மன்ற எல்லை மீள்நிர்ணயத்தில்

# திருகோணமலை மாவட்ட தமிழ்பேசும் மக்களுக்கு கூடுதல் பாதிப்பு

**ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் கதிர். திருச்செல்வம்**

*அ. அச்சுதன்*



திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற எல்லை மீள்நிர்ணயத்தில் இம்மாவட்டத்தின் தமிழ், முஸ்லிம் மக்கள் கூடுதலாகப் பாதிக்கப்படுவார்கள் என்று ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் ஒருங்கமைப்புச் செயலாளரும் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவருமான கதிர். திருச்செல்வம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற எல்லை மீள்நிர்ணயம் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில் திருக்கோணமலை மாவட்டத்தில் இயங்குகின்ற எட்டுக் கட்சிகள் பங்குபற்றியிருந்தன. இக்கலந்துரையாடலில் கதிர். திருச்செல்வம் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலை மாவட்டத்தில், அதிக எண்ணிக்கையில் முஸ்லிம்களும் அடுத்ததாக தமிழர்களும் மூன்றாவதாக சிங்களவர்களும் வாழ்கின்றனர். ஆனால் குறைந்த எண்ணிக்கையில் சிங்கள மக்கள் வாழுகின்ற உள்ளூராட்சி மன்றங்களான மொரவெவ, கோமரங்கடவெல, பதவிசிறிபுர ஆகியவற்றுக்கு அதிகளவான எண்ணிக்கையில் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் வழங்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழும் கிண்ணியா நகர சபை, கிண்ணியா பிரதேச சபை போன்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கு குறைவான உறுப்பினர்கள் ஒதுக்கப்பட்டுள்ளனர். அதிகளவான மக்கள் தொகையையும் வாக்காளர்களையும் கொண்டிருக்கும் மூதூர் பிரதேச சபைக்கு குறைவான எண்ணிக்கையிலேயே உறுப்பினர்கள் குறித்தொதுக்கப்பட்டுள்ளனர்.

தற்போது அரசினால் கோரப்பட்டுள்ள உறுப்பினர்களை குறைப்பதற்கான முன்மொழிவை, திருக்கோணமலை மாவட்டத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து, ஒரே முடிவை எட்டுவதற்கான முயற்சியாகவே ஈரோஸ் ஜனநாயக முன்னணியால் அனைத்துக் கட்சிக் கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமை இன்றியமையாதது. இரண்டு இனமக்களிடையேயான மனந்திறந்த கலந்துரையாடல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டாலன்றி, இரண்டு இனமக்கள் கூட்டமும் தமது இருப்பை இழக்க வேண்டிய நிலைக்குச் செல்வது உறுதி. எண்பதுகளின் பின்னர், இரண்டு இனமக்கள் கூட்டத்தினரிடையே ஏற்பட்ட மனஐயங்கள், ஸ்ரீலங்கா அரசால் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டன. இதை விடுதலை இயக்கங்களும் இஸ்லாமிய மக்களும் சரியாகப் புரிந்து கொள்ளாமையே மனங்களுக்கு இடையேயான விரிசலுக்குக் காரணமாகும். இக்கலந்துரையாடலானது, தமிழ் பேசும் மக்களிடையேயான பிணைப்புக்கான அத்திவாரமாகவும் இருக்கட்டும் என்றார்.

சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் வருகை

# பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்

**ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் இ. கதிர்**

*சண்முகம் தவசீலன்*

போர் காலப்பகுதியில், தமிழ்மக்களுக்கு எதிராக, இனப்படுகொலைக்கு ஆதரவாக இலங்கை அரசாங்கத்துடன் ஒன்றாக இணைந்து பின்னணியில் நின்றவர்கள் சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளாகும் என்று ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் இ. கதிர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதைத் தெரிவித்தார். அங்கு மேலும் கருத்துக் கூறுகையில் தெரிவித்ததாவது:

ஹம்பாந்தோட்டை, கொழும்பு காலிமுகத்திடல் என்பன சீனாவுக்கு விற்கப்பட்டுள்ளன. தொடர்ந்து, சீனா தனது ஆதிக்கத்தை வடக்கில் செலுத்துவதற்காக அபிவிருத்தி என்ற போர்வையில் களமிறங்கியுள்ளது.

தற்போது, இரகசியமான முறையில் அந்த வேலைத்திட்டத்தை சீனா முன்னெடுத்து வருகின்றது. கடற்றொழிலில் ஈடுபடும் எமது உறவுகளை முன்னேற்றுவதாகக் கூறி, பல அபிவிருத்திகளை முன்னெடுத்து உள்ளீர்க்கின்றார்கள். இவற்றை, கடற்றொழில் அமைச்சுக்கூடாக முன்னெடுத்து வருகின்றது.

முல்லைத்தீவு,சாலைப்பகுதி முக்கியமான இயற்கை தளமாகும். இந்தப் பகுதியை ஆக்கிரமிக்க சீனா இரகசியமான வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. சாலைக்கு நேராக இருப்பது இந்தியாவின் வேதாரணியம் ஆகும். இந்தியாவை கண்காணிப்பதற்காக சீனா தளத்தை அமைப்பதற்கு இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

அண்மையில், பாகிஸ்தான் தூதுவர் பருத்தித்துறை துறைமுகத்தைப் பார்வையிட்டுள்ளார். இதன் நோக்கம், தமிழ் மக்களின் நலன் சார்ந்ததாக அமையாது; இதை நாங்கள் எதிர்க்கின்றோம். பாகிஸ்தானின் வருகை நல்ல விடயமல்ல. தமிழ் மக்களின் வளங்களை சுரண்டுவதும் இந்தியாவை கண்காணிப்பதும்தான் சீனா, பாகிஸ்தான் நாடுகளின் நோக்கமாகும்.

இலங்கை அரசாங்கம், தமிழர்களுக்கு தீர்வு வழங்கப் போகின்றோம்; அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் திரண்டு வருமாறு அழைக்கின்றார்கள். அதே சூழலில், தமிழ் மக்களுக்கு எதிரான சக்திகளையும் தமிழர் பிரதேசத்துக்கு அனுமதிகளைக் கொடுத்து அனுப்புகின்றார்கள். அரசாங்கத்தின் இரட்டை முகத்தை நாங்கள் பார்க்கவேண்டும்.

தமிழர்களின் நலன்சார்ந்த விடயங்களில் அக்கறையாக இருக்கின்ற இந்திய அரசாங்கத்துடன், நாங்கள் ஒன்றித்துப்போக வேண்டிய தேவை உள்ளது. இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்ற சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் வருகை, தமிழர்களுக்கு மட்டுமல்ல, இந்திய தேசத்துக்கும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றார்.



## ஜப்பான் அரசாங்கத்தால் குளம் புனரமைப்பு

*தீஷான் அஹமட்*

ஜப்பான் நாட்டு அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ‘சமூக அடிப்படையிலான சிறு குளம் புனரமைப்பு திட்டத்தின்கீழ், சம்பூரில் உள்ள பெரியகுளம் 91 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு, புதன்கிழமை (23) விவசாயிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முதன்மை அதிதிகளாக இலங்கைக்கான ஜப்பான் தூதுவராலயத்தின் உதவிச் செயலாளர்கள் கலந்து கொண்டு குளத்தை விவசாயிகளின் பாவனைக்காக திறந்து வைத்தனர். இக்குளத்தை ‘பீஸ் விண்ட்ஸ்’ நிறுவனம் சிறப்பாக புனரமைப்புச் செய்திருந்தது.

## கொள்ளை சந்தேக நபர்கள் கைக்குண்டுடன் கைது

*எம். எஸ். எம் நூர்தீன்*



காத்தான்குடி பொலிஸ் பிரிவில், பல்வேறு திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரை கைக்குண்டுடன் காத்தான்குடி பொலிஸார் புதன்கிழமை (23) இரவு கைது செய்துள்ளனர்.

காங்கேயனோடை 13ஆம் வட்டாரம் பிரதான வீதியிலுள்ள வீடொன்றில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பாலமுனை பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபர்கள் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் ஆலோசனையின் பேரில், காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம். எஸ் ரஹீம் தலைமையிலான பொலிஸ் சார்ஜன்ட் ஜெயசிங்க, கருணாரட்ன, பொலிஸ் அதிகாரிகளான தனோஜன், இரந்த ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட விசாரணையின் போது குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்

சந்தேக நபர்களிடமிருந்து, காங்கேயனோடை வீட்டில் திருடப்பட்ட 50,000/-ரூபாய் பணம், அலைபேசி, பாவனை பொருட்கள், கடிகாரம் ஆகியவற்றை மீட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.



## “பொலிஸார் தாக்கினால் திருப்பித் தாக்குவோம்”

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்**

*சுப்பிரமணியம் பாஸ்கரன்*

இனிவரும் காலங்களில் பொலிஸார் தாக்கினால் திருப்பித் தாக்குவோம் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தில் நேற்று (24) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவுக்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொண்ட பொழுது, நாங்கள் நீதி கேட்டு அவ்விடத்தில் கூடினோம். இதன்போது பொலிஸாரும் பாதுகாப்பு தரப்பினரும் கூடி, எமது போராட்டத்தைத் தடுத்ததுடன், எம்மைத் தாக்கினர். நாம் தாக்குதலுக்கு உள்ளாகி, இன்றும் சிகிச்சை பெற்று வருகிறோம். அன்றைய தினம் அவர்கள் நுள்ளியும் துன்புறுத்தி உள்ளனர். முட்கம்பிக்குள் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டோம்.

பொலிஸார் இவ்வாறு நடந்துகொண்டமையால் எமது நீதிக்கான போராட்டம் நெருக்கடிக்குள்ளானது. எம்மை நாகரிகமற்ற வார்த்தைகளால் திட்டினர். பணத்துக்காகவும் பிரபல்யத்துக்காகவும் அலைவதாக பொலிஸார் கூறினர். நாங்கள் அவை எவற்றுக்கும் அலையவில்லை.

எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறியும் நீதிக்காகவே போராடுகிறோம். இலங்கை அரசின் மீது எமக்கு நம்பிக்கை இல்லை. சர்வதேசம் எமக்கு நீதியை பெற்றுத்தர வேண்டும் என்றே போராடுகிறோம்.

தொடர்ச்சியாக எம்மை தாக்கும் பொலிஸாருக்கு ஒரு விடயத்தை சொல்லி வைக்கின்றோம். நீங்கள் எம்மை தாக்கினால், நாங்களும் திரும்பத் தாக்க வேண்டிய நிலை ஏற்படும். நாங்கள் உங்கள் மீது கைவைத்தால் எம்மை கைது செய்வீர்கள் என்பதும் எமக்கு தெரியும். தொடர்ச்சியாக எம்மைத் தாக்குகின்றீர்கள். ஒரு கட்டத்தில் நாங்கள் பொறுமை இழந்து திரும்பத் தாக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என்பதை அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும். எதிர்வரும் காலங்களில் மக்கள் விழிப்புடன் நடந்துகொள்ள வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## முல்லைத்தீவு ஊடக அமையத்துக்குள் நுழைந்த இராணுவம்

*சண்முகம் தவசீலன்*



முல்லைத்தீவு ஊடக அமையத்துக்கு நேற்று (24) வருகைதந்த படையினர், ஊடக அமையத்தின் தலைவர் அல்லது முகாமையாளரின் பெயர், தொலைபேசி இலக்கம் போன்ற தகவல்களை வழங்குமாறு கோரியிருந்தனர்.

சீருடை தரித்த இரண்டு இராணுவத்தினர் தம்மை 591 ஆவது படைமுகாமிலிருந்து வருவதாக அடையாளப்படுத்தியே மேற்படி தகவல்களைக் கோரியிருந்தனர்.

முல்லைத்தீவு நகரில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களின் தகவல்களும் தம்மால் திரட்டப்பட்டு வருவதாகவும் அதன் அடிப்படையிலேயே ஊடக அமையத்தின் தகவல்களையும் கோருவதாக வருகைதந்த படையினர், ஊடக அமையத்தின் பொருளாளர் கணபதிப்பிள்ளை குமணனிடம் தெரிவித்தனர்.

“என்ன நோக்கத்துக்காக இந்தத் தகவல்களை திரட்டுகின்றீர்கள்” என ஊடகவியலாளர் குமணன் கோரியபோது, “எமக்குத் தெரியாது; எமது முகாமின் அதிகாரி விவரங்களைத் திரட்டுமாறு பணித்துள்ளார். முன்னர் இருந்த அதிகாரி மாற்றலாகி சென்றுவிட்டார். இப்போது புதிய அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் கட்டளைப்படியே பதிவுகளை மேற்கொள்கின்றோம்” என்றனர்.

இதற்குப் பதிலளித்த ஊடகவியலாளர், “நோக்கம் என்ன என்பதை சரியாகத் தெரிந்து கொள்ளாது, எம்மால் தகவல் வழங்க முடியாது” என மறுத்த நிலையில் படையினர் திரும்பிச் சென்றனர்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் ஊடக சந்திப்புகளோ, நிகழ்வுகளோ இடம்பெறும் சந்தர்ப்பங்களில், ஊடக அமையத்துக்கு அருகில் இராணுவ புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக கண்காணிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் நிலையில், படையினர் வருகைதந்து தகவல்கள் கோரியமை ஊடகவியலாளர்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு வருடமும் மாவீரர் தினத்தில், முல்லைத்தீவு நகர வர்த்தக நிலையங்கள் முழுமையாக மூடி இருப்பார்கள். இதன்போது, வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களை தொலைபேசியில் தொடர்புகொள்ளும் படையினர், கடைகளை திறக்குமாறு அச்சுறுத்தும் சம்பவங்கள் கடந்த வருடங்களில் பதிவாகியிருந்த நிலையில், இவ்வருடமும் மாவீரர் நாள் நெருங்கி வரும் நிலையில், முல்லைத்தீவு நகரில் உள்ள வர்த்தக நிலையங்களின் தகவல்களை படையினர் திரட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## புதுக்குடியிருப்பு கிராமத்துக்கு புதிய பாலம்

*அபு அலா*

திருகோணமலை, வரோதயநகர், புதுக்குடியிருப்பு கிராமத்தில், உப்புவெளி பிரதேச சபையும் இலங்கை காப்போம் நிறுவனமும் இணைந்து நிர்மாணித்த பாலம் புதன்கிழமை (23) திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை காப்போம் நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் ஜே.ஆர் பிரவினா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு உப்புவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஆர்.எ.எஸ்.ரீ இரத்நாயக்க, காப்போம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கு. பிரதீப்கரன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டு குறித்த பாலத்தை திறந்து வைத்ததுடன் பயன்தரும் மரக்கன்றுகளையும் வழங்கி வைத்தனர்.

நிகழ்வில், உப்புவெளி பிரதேச சபை உறுப்பினர்களான எஸ்.விபுசன், வி.பாபுகாந், கிராம சேவகர் எம். பிரசாந்தினி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இலங்கை காப்போம் நிறுவனம், இனமத மொழி வேறுபாடுகளுக்கப்பால் மக்களின் தேவைகளையறிந்து, உதவிகளை உடனடியாக வழங்கி வருகின்றதொரு நிறுவனமாக, சுனாமி அனர்த்தத்தின் பிற்பட்ட காலங்களில் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

காரைதீவு ஆபத்தில்...

## மழைக்குப் பின்னர் 49 டெங்கு நோயாளிகள் அடையாளம்

*வி.ரி சகாதேவராஜா*

சமகால வானிலை காரணமாக, காரைதீவு பிரதேசம் டெங்கு ஆபத்தை எதிர்நோக்கி இருக்கின்றது. இதுவரை 49 நோயாளிகள் இனங்காணப்பட்டு இருக்கின்றார்கள். எனவே, பொதுமக்கள், நிறுவனங்கள் என சகலரும் டெங்கை ஒழிப்பதற்கு உதவ வேண்டும் என காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லிமா பஷீர் கேட்டுக்கொண்டார்.

டெங்கு நோய் ஒழிப்பு தொடர்பான அவசர விசேட கூட்டம் நேற்று (24) சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றபோதே மேற்படி வேண்டுகோள் விடுத்தார். அங்கு தொடர்ந்து அவர் கூறியதாவது:

மழைக்கு பிந்திய இந்தக் காலகட்டத்தில், டெங்கு நோய் பெருகுகின்ற ஆபத்து கூடுதலாகக் காணப்படுகின்றது. குறிப்பாக காரைதீவு 8, 10,11, 12 ஆகிய பிரதேசங்களில் கூடுதலான டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டு வருகிறார்கள். இதற்கு விசிற வேண்டிய இரசாயன பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. எனவே, பொதுநிறுவனங்கள், பொதுமக்கள் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

## பஸ் மோதி சிறுவன் படுகாயம்: சாரதிக்கு கத்திக்குத்து

*செந்தூரன் பிரதீபன்*

யாழ்ப்பாணம் - பலாலி பிரதான வீதியில் போக்குவரத்து சபை பஸ் மோதி சிறுவன் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவம், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்னால் இடம்பெற்றது. நந்தகுமார் கனிஸ்டன் (வயது 11) என்ற சிறுவனே விபத்தில் படுகாயங்களுக்கு உள்ளானான்.

இந்த விபத்தை அடுத்து, அங்கிருந்த இளைஞர்கள் பஸ்ஸை கடுமையாக சேதப்படுத்தினர். அத்துடன் பஸ் சாரதியை பொதுமக்கள் கடுமையாக தாக்கி, கத்தியால் குத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சாரதி, பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

விபத்து குறித்து விரிவான விசாரணைகளை பலாலி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வீட்டுத் தோட்டங்களை அகற்றுமாறு

# நிர்வாகம் கெடுபிடி

■ செ.தி.பெருமாள்

ஹொரனை பிலான்டேசனுக்குரிய கவரவில தோட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் குடியிருப்பு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சிறிய வீட்டுத் தோட்டங்களை அகற்றுமாறு, தோட்ட நிர்வாகம் நேற்று (24) உத்தரவிட்டுள்ளது.

கடந்த 1997 முதல் 2021 ஆண்டு காலப் பகுதியில் 125 வீடுகள் அமைக்கப்பட்ட வீடுகளில், உள்ள தரிசு நிலத்தில் வீட்டு தோட்டம் உருவாக்கப்பட்ட வீட்டு தோட்டங்களை அகற்றுமாறு, தோட்ட நிர்வாகம் பொலிஸார் மூலமோக நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனை எதிர்த்து நேற்று (24) பகல் அத் தோட்ட தொழிலாளர்கள் தொழிலாளரின் பிள்ளைகள் ஒன்று கூடி எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

குறித்த விவசாய காணிகளை அழித்து குடியிருப்பு பகுதிகளில் டேப்பன்டைன் மர கன்றுகள் நடும் திட்டம் உருவாக்கபட உள்ளதென தோட்ட நிர்வாகம்





தெரிவித்துள்ளதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

தேயிலை தோட்ட பகுதியில் பல ஹெக்டயர் தேயிலை செடிகளில் காடாக உள்ள நிலையில், அதில் அந்த மரக் கன்றுகளை நடுவதற்கு தோட்ட நிரவ்கம் நடவடிக்கை எடுக்காமல் வீட்டுத்தோட்டம் பயிர் செய்கை செய்யப்பட்டுள்ள இடங்களில் மரக்கன்றுகளை நடுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் தெரிவிக்கின்றனர்.

நேற்று (24) மதியம் தோட்ட நிர்வாகம் பெக்கோ இயந்திரம் உபயோகித்து பயிர் செய்யப்பட்ட காணிகளை முழுமையாக அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் மலையக மக்கள் முன்னணி தலைவர் இராதாகிருஷ்ணன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் திகாம்பரம் ஆகியோருக்கு அறிவித்துள்ளதாகவும் தோட்ட தொழிலாளர்கள் தெரிவித்தார்கள்.



ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளைப் பிரசவித்த தாய்க்கு

## தியாகி அறக்கொடை நிதியம் நிதியுதவி

■ எம்.கிருஸ்ணா, ரஞ்சித் ராஜபக்ஷ

ஒரே பிரசவத்தில் மூன்று பெண் குழந்தைகளை பிரசவித்த மஸ்கெலியா பிரவுன்ஸ்வீக் தோட்டத்தைச் சேர்ந்த 31 வயதான கிருஷ்ணகுமார் பாக்கியலட்சுமி, என்ற இளம் தம்பதியினரின் குடும்ப நிலைமையை கருத்திற் கொண்டு அவர்களுக்கு உதவித் தொகையான முதற்கட்டமாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான 'சமூக ஜோதி' வாமதேவன் தியாகேந்திரனினால் முதற் கட்டமாக இவ்வாறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அன்றாடம் தோட்ட வேலைகளில் ஈடுபட்டு தமது ஜீபனோபாயத்தினை நடத்தி வந்த நிலையில், இவ்வாறு மூன்று பெண் குழந்தைகளை இம் மாதம் 01 ஆம் திகதி நுவரலிய மாவட்ட வைத்தியசாலையில் இவர் பிரசவித்துள்ளார்.

பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் தோட்ட வேலைகளில் ஈடுபட்டு தமது வாழ்க்கையை நடத்தி வரும் இக்குடும்பத்தின் நிலைமை குறித்து ஊடகங்களின் வாயிலாக அறிந்து கொண்டதன் பின்னரே இவ்வாறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கல்குடா மீடியா போரத்தின் பணிப்பாளர் ஊடகவியலாளரும் தியாகி அறக்கொடை நிதியத்தின் இணைப்பாளருமான எம். ரீ.எம். பாரிஸ் மூலம் குறித்த தம்பதியினரின் இல்லத்தில் வைத்து ஒப்படைக்கப்பட்டது.

குறித்த 3 சிசுக்களுடன் இத்தம்பதியினருக்கு ஏற்கனவே 10 மற்றும் 8 வயதில் இரண்டு பிள்ளைகள் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## அமரர் சந்திரசேகரனின் தாயார் காலமானார்

■ சுஜிதா



மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் பெரியசாமி சந்திரசேகரனின் தாயார் நேற்று தனது 86 வது வயதில் இயற்கை எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24) தலவாக்கலை - ஹொலிருட் தகன சாலையில் நடைபெற்றது.







## மஹா கும்பாபிஷேகம்

சித்தர்களின் குரல் சமஸ்தானத்தின் ஏற்பாட்டில், நூற்றாண்டுகள் பழமையான பசறை– கோணக்கலை, அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. மஹா கும்பாபிஷேக கிரியைகள் கொட்டகலை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு கிரியாகலாமணி சிவாச்சாரியார் திலகம் சிவஸ்ரீ ஜெயராம் நிதர்ஷன் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.
(நடராஜா மலர்வேந்தன்)

## தெஹியோவிட்டயில் மொழி பயிற்சி செயலமர்வு



■ என்.ஆராச்சி

நீதி அமைச்சின் தேசிய ஒற்றுமை மற்றும் மறுசீரமைப்பு தொடர்பான அலுவலகத்தின் அனுசரணையுடன் தெஹியோவிட்ட பிரதேச செயலகப் பிரிவின் ஊடாக குறித்த பிரதேச இளைஞர், யுவதிகளுக்கான இரண்டாம் மொழி பயிற்சி செயலமர்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

12 நாட்கள் குறித்த பயிற்சி செயலமர்வு முன்னெடுக்கப்பட்டதுடன், இதன் இறுதி நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் பிரதேச செயலத்தில் நடைபெற்றது.

இந்த செயலமர்வில் சுமார் 50 இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு பயிற்சிகளைப் பெற்றனர்.

ஹட்டன் பொலிஸாரால் மாணவர்களுக்கு

## இலவசமாக தலைக்கவசம் வழங்கப்பட்டது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

மோட்டார் சைக்கிள் மூலம் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கு பாதுகாப்பு தலைக்கவசங்களை வழங்கும் சமூக செயற்பாடொன்று ஹட்டன் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது.

இதற்கமைய, ஹட்டன் பிரதேசத்தில் பாதுகாப்ப தலைக்கவசங்கள் இன்றி, மோட்டார் சைக்கிளில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கு இலவசமாக தலைக்கவசங்கள் வழங்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் (23) முன்னெடுக்கப்பட்டது.

ஹட்டன் பிரதேசத்திலுள்ள தமிழ், சிங்கள பாடசாலைகளில் கல்வி கற்கும்அதிகமான பிள்ளைகள், தலைக்கவசம் இன்றி, பாடசாலைக்கு



மோட்டார சைக்கிளில் அழைத்து வரப்படுகின்றமை தொடர்பில் ஹட்டன் போக்குவரத்து பொலிஸார் ஆராய்ந்து இந்த செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர்.

ஹட்டன் நகரிலுள்ள தனியார் காப்புறுதி நிறுவனம் ஒன்றின் நிதி உதவியுடன், மாணவர்களுக்கு இலவசமாக தலைக்கவசம் வழங்கி வைக்கப்பட்டது.

## ரயில் தண்டவாளத்தை அண்மித்த 10 ஏக்கர் தீயால் எரிந்து சாம்பலானது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

> **ரயில் வீதிகளில் நடந்து செல்லும் சிலர் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதாக தெரிவிப்பு**

மலையகத்துக்கான ரயில் மார்க்கத்தின் ரொசல்ல மற்றும் ஹட்டன் ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் உள்ள பகுதியில் ஏற்பட்ட தீ பரவலால் 10 ஏக்கர் நிரப்பரப்பு எரிந்து சாம்பலாகியுள்ளது.

குறித்த இரு ரயில் நிலையங்களுக்கும் இடையிலான ரயில் வீதிக்கு அண்மித்த பகுதியிலேயே இத்தீபரவல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் (23) இரவு 7 மணியளவில் இத்தீபரவல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மலையகத்தில் தற்போது நிலவும் வரட்சியான வானிலைக்கு மத்தியில் ரயில் வீதிகளில் நடந்து செல்லும் சிலர் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் ஹட்டன் ரயில் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனவே, இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பான தகவல்களை ஹட்டன் வனவள அலுவலகத்துக்கு வழங்குமாறும் வனவள அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தீயால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு உதவி

■ துவரகஷான்

அக்கரப்பத்தனை - அப்பகிரன்லி தோட்டத்தில் உள்ள வீடொன்று, இந்த மாதம் 22ஆம் திகதி எரிந்து சாம்பலாகியதுடன், இத்தீயால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு தேவையான உதவியை வழங்க

அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தீயால் அந்த வீட்டில் வசித்த 8 பேர் பாதிக்கப்பட்டு, வீட்டிலிருந்து பெறுமதியான பொருள்களுடன் பாடசாலை உபகரணங்களும் எரிந்து கருகியுள்ளன.

இவ்வாறு தீயால் பாதிக்கப்பட்டவர்களை நேற்று முன்தினம் (23) அக்கரப்பத்தனை பிரதேசசபை தவிசாளர் இராமன்



கோபாலகிருஷ்ணன் நேரடியாக சந்தித்து, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு தேவையான உதவிகளை வழங்கும் வகையில் தோட்ட அதிகாரியுடனும் கலந்துரையாடியுள்ளார். அத்துடன் குறித்த குடும்பத்துக்கு சபையூடாக செய்யவேண்டி விடயங்களையும். செய்வதற்கு துரித நடவடிக்கை எடுத்துள்ளதாக தவிசாளர் தெரிவித்தார்.



## கந்தப்பளை பொது நூலகம் மாதிரி நூலகமாக தெரிவு

■ ஆ.ரமேஸ்

> **புலமை பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் வழங்கப்பட்டது.**

உள்ளூராட்சி சபை மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் காரியாலயத்தினால் நுவரெலியா பிரதேச சபையின் கந்தப்பளை பொது நூலகம் மாதிரி நூலகமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, நூலக வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட நூலகங்களுக்கு சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான புத்தகங்களை நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜ் வழங்கிவைத்தார்.

மேலும் பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை, கவிதை, பேச்சு, ஓவியம் வரைதல் முதலிய போட்டி நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டதோடு ,இலவச நூலக அங்கத்துவமும் வழங்கி வைக்கப்பட்டது.

இதன் போது இம்முறை தரம் 5 புலமை பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்களும் வழங்கி வைக்கப்பட்டன.

தொழிற்பயிற்சி நிலையத்துக்கு

## விஜயம் செய்த இந்திய பிரதி உயர்ஸ்தானிகர்

■ கேதீஸ்

இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் ஸ்ரீ வினோத் கே. ஜேகப் ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டு, அங்குள்ள சிரேஷ்ட முகாமைத்துவ குழுவினருடன் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர் பாரத் அருள்சாமி, ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் வதிவிட முகாமையாளர் விஜேசிங் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இதன்போது தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தை மேம்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.



# சட்டம் சகலருக்கும் சமமானதாயின் நிம்மதியாக வாழலாம்

மக்கள் போராட்டமான 'அரகலய', பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மக்கள் பிரதிநிதிகளான 225 பேருக்கும் எதிராகவே திசைதிரும்பியது. எனினும், 'அரகலய'வின் தலைமைத்துவம் சிதறடிக்கப்பட்டு, 'அரகலய' வேறு திசைகளில் பயணித்தமையால் பல்வேறான நெருக்கடிகளை சந்திக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (23) உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மற்றுமோர் 'அரகலய' வருமாயின், அவசரகாலச்சட்டத்தை பிரகடனப்படுத்தி இராணுவத்தைக் கொண்டு அடக்குவேன் என எச்சரித்துள்ளார்.

போராட்டங்கள், பேரணிகள், ஊர்வலங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவது ஜனநாயக உரிமையாகும். எனினும், அந்த உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தும் போதுதான் போராட்டங்களை 'இரும்பு கால்'களைக் கொண்டு அரசாங்கங்கள் நசுக்கிவிடுகின்றன. எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்கூட்டியே எச்சரித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதிகளில் பலர், ஊழல் மோசடிகளுடன் தொடர்புடையவர்கள். ஒருசிலருக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு நீதிமன்றம் வரையிலும் சென்றுள்ளன. எனினும், சட்டரீதியான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

நாட்டில் பொருளாதாரம் சீர்குலைந்தமைக்கு ஊழல்,மோசடிகள் பிரதான காரணங்களாக அமைந்துள்ளனவென குற்றஞ்சாட்டப்பட்டு உள்ளது. குற்றங்களுக்கு தண்டனை வழங்கியே தீரவேண்டும். எனினும், பெரும் குற்றங்களைச் செய்வோர், சிறப்புரிமையின் கீழ் சுதந்திரமாக நடமாடுகின்றனர்.

நாட்டில் மின்வெட்டு அமல்படுத்தப்படும் போது, பிரமுகர்கள் வாழும் பகுதிகள் மட்டும் வெளிச்சமாக இருக்குமென பலரும் கூறுகின்றனர். எனினும், பிரமுகர்களில் பலரும் நீர், மின்சார கட்டணங்களில் பல இலட்சம் ரூபாய்களை இன்னுமே செலுத்தவில்லையென செய்திகள் வெளிவந்துகொண்டு இருக்கின்றன.

இந்நிலையில், கொழும்பு-07 விஜேராம மாவத்தையில் உள்ள பிரமுகர் வீட்டில், ஒரு இலட்சம் ரூபாய்க்கான மின்சாரக் கட்டணம் செலுத்தப்படவில்லை. அந்த வீட்டுக்கான மின்சாரத்தை துண்டிப்பதற்கு சென்றிருந்த மின்சார சபையின் ஊழியர்கள் இருவர், முன்னாள் அமைச்சரால் கழுத்தைப்பிடித்து வெளியில் தள்ளப்பட்டுள்ளனர்.

சாதாரண குடிமகன் ஒருவர், அரச ஊழியர்களிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தால், கடமைக்கு இடையூறு விளைவித்தல் எனும் குற்றச்சாட்டின் கீழ், கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, விளக்கமறியலில் வைத்திருப்பர்.

அந்தச் சட்டம், முன்னாள் அமைச்சர் மீது, இன்னுமே பாயவில்லை. தங்களுடைய உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான மின்சார, நீர்க்கட்டணங்களை செலுத்தாவிடின், தங்களுக்கு முன்னாளில் பயன்படுத்தியவர்கள் கட்டணத்தை செலுத்தவில்லையென பாராளுமன்றத்தில் தங்களுடைய சிறப்புரிமையை பயன்படுத்தி விளக்கமளித்த சம்பவங்கள் ஏராளம்.

உரிமைகளுக்கான போராடுவோரை நசுக்குவதற்கு எச்சரிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஊழல், மோசடிகளில் ஈடுபடுகின்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிராக, அதிரடியான நடவடிக்கைகளை எடுத்து, சட்டத்தை சகலருக்கும் சமமானதாகப் பயன்படுத்த உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

கோழைகளுக்கு ஏது வாழ்வு? வீரர்கள் மரிப்பதில்லை. தினம் தினம் வீழ்ந்தும் உக்கிரமாக எழுந்திடுவான். பயந்து வாழ்பவனுக்கு ரோசம் கிடையாது. நியாயங்களைத் தட்டிக் கேட்கத் துணிச்சல் வேண்டும்.

துணிந்தவனுக்குத் தொய்வும் இல்லை; தோல்வியும் கிடையாது. எனது நாடு; எனது இனம் என்பதற்காகப் போராடுபவருக்குப் பின்னால் செல்பவர்களைவிட, டாம்பீகமாகவும் தவறான முறையிலும் செல்வம் தேடுபவர்களுக்குப் பின்னால் திரிகின்றவர்கள்தான் அதிகம்.

நியாயத்தைப் பேசுபவர்களை வாழத்தெரியாதவர்கள் என்கின்றனர். அடிமை வாழ்வே சகஜமாகி விட்டது. மனிதன், செயலாற்றுவதற்கே பிறந்தவன்; செத்துப்போவதற்கல்ல! மக்களை மறந்தவன், வாழும் உரிமையை இழக்கிறான்.

விலங்குகள், பறவைகள் கூட, மனிதர்களை விட சுதந்திரமாக வாழுகின்றன. ஆனால், நாம் அக்கம்பக்கம் பார்த்துப் பேச வேண்டியுள்ளது. எவராவது 'பத்தவைத்து' விடுவாரோ என அஞ்சவேண்டியுள்ளது.

உண்மைகளைத் துணிச்சலுடன் பேசுக! பொய்யர்கள்தான் மறைந்து நின்று பயத்துடன் பேசுகின்றார்கள். சுதந்திரம் நமக்கு எப்போது?

–பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

வலதுசாரி தீவிரவாதத்தின் நிழலில் – 03:

# அதிவலதுசாரி வழித்தடத்தில் ஐரோப்பா



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இத்தாலியின் தீவிர வலதுசாரிக் கட்சி ஆட்சியைப் பிடித்துள்ளது. வாக்களித்தோரில் நான்கு இத்தாலியர்களில் ஒருவர், தீவிர வலதுசாரி 'ஃப்ராடெல்லி டி இத்தாலியா' கட்சியின் தலைவரான ஜியோர்ஜியா மெலோனிக்கு வாக்களித்துள்ளனர்.

ஜியோர்ஜியா மெலோனியின் இந்த வெற்றியும் மக்களின் ஏகோபித்த ஆதரவும், ஐரோப்பிய அரசியலில் தீவிர வலதுசாரித் திருப்பம் பற்றிய புதிய அச்சத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. அத்துடன், ஐரோப்பியாக் கண்டம் ஒரு போரில் ஈடுபட்டிருக்கும்போது, ஐரோப்பாவில் கொந்தளிப்பை இத்தாலி கொண்டுவந்துவிடும் என்ற கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

கெடுபிடிப்போர் முடிவடைந்த பின்னர், மத்தியவாத கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியினரின் பின்னடைவு ஏற்படுத்திய வெற்றிடத்தை, ஜனரஞ்சக வலதுசாரிகள் நீண்ட காலமாக ஆக்கிரமித்திருப்பதை இத்தாலி கண்டுள்ளது. இந்தப் போக்கு, முன்னாள் பிரதம மந்திரி சில்வியோ பெர்லுஸ்கோனியின் கட்சியான 'ஃபோர்ஸா இத்தாலியா'வால் தொடங்கப்பட்டது. இது படிப்படியாக அதன் வலதுபுறத்தில் கூட்டணிகளை உருவாக்கியது.

காலப்போக்கில், இந்த இடம் திடப்படுத்தப்பட்டதால், ஜனரஞ்சகத் தளங்களில் இனவெறி, குடியேற்ற எதிர்ப்பு, தேசியவாதம், சிறுபான்மை உரிமைகள் எதிர்ப்பு போன்றன படிப்படியாக முக்கிய நீரோட்டத்துக்கு வந்தன.

ஜனரஞ்சக வலதின் ஆற்றலும் மைய அரசியல் நீரோட்டத்தில் அதன் நிலையான இருப்பும் 2000களில் இருந்து ஐரோப்பிய அரசியலில் பிரதிபலிக்கிறது. 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடியும் அதன் தொடர்ச்சியும், வலது, அதிவலது சித்தாந்தம் ஐரோப்பாவில் மெதுமெதுவாக வளர்ச்சியடைவதற்கு வழிவகுத்துள்ளது.

கடந்த ஒரு தசாப்தகாலத்தில், பல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பிரதான எதிர்க்கட்சி என்ற நிலைக்கு, அதிவலது சக்திகள் முன்னேறியுள்ளன. இன்றைய பொருளாதார நெருக்கடியும் உக்ரேனிய யுத்தமும் அதிவலதை ஆட்சிக்கட்டிலில் அமர்த்திவிடும் என்பதை இத்தாலிய உதாரணம் காட்டுகிறது.

கோடைகாலத்தில் இத்தாலியில் மின்சாரத்தின் விலை பலமடங்கு அதிகரித்தது. அப்போதைய இத்தாலிய பிரதமர், ஐரோப்பாவின் நலனுக்காகப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டினார். உக்ரேனிய யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்; ரஷ்யா தோற்கடிக்கப்பட வேண்டும் என்றார்.

மக்கள் மின்சார விலையேற்றம் குறித்து முறையிட்டார்கள். "உங்களுக்கு சமாதானம் வேண்டுமா, குளிரூட்டிகள் வேண்டுமா" என்று கேட்டார் பிரதமர். விளைவு அவரை அகற்றி, அதிவலது பிரதமரை தமக்காக இத்தாலியர்கள் தெரிந்திருக்கிறார்கள்.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில், இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகி 42% வாக்குகளைப் பெற்றவர் பிரான்ஸின் அதிவலது கட்சியின் தலைவரான மரின் லு பென். இன்றைய பொருளாதார நெருக்கடி அன்று இருந்திருந்தால், அவரே இன்று ஜனாதிபதியாக இருந்திருப்பார் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஐரோப்பாக் கண்டத்தில் முதன்மையான நாடுகளில் ஒன்றான பிரான்ஸில், பொருளாதார வலுவிலும் சனத்தொகை அடிப்படையிலும், அதிவலது கிட்டத்தட்ட அரைவாசி வாக்காளர்களால் அங்கிகரிக்கப்படுவதானது, முக்கியமான கேள்வியை எழுப்புகிறது. கடந்த அரை நூற்றாண்டாக, அதிதீவிரமானது, மனித உரிமைகளை மறுப்பது, நிறவெறித் தன்மையுடையது, குடியேற்றவாசிகளுக்கு எதிரானது என்று கருதப்பட்டவை, இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகவும் சாதாரணமானவையாகவும் மாறிவிட்டனவா?

பிரான்ஸ் அனுபவம் சொல்கிற பதில் யாதெனில், எவையெல்லாம் தீவிரமானவை என்று கருதப்பட்டதோ, அவையெல்லாம் இன்று மிகச் சாதாரணமானவையாக மாற்றப்பட்டுள்ளன. ஐரோப்பாவில் உள்ள வெள்ளை கிறிஸ்தவர்களுக்குப் பதிலாக, வெள்ளையர் அல்லாத மற்றும் கிறிஸ்தவர் அல்லாத குடியேறியவர்கள், பெரும்பாலும் ஆப்பிரிக்காவில் இருந்து வந்த முஸ்லிம்கள் மீதான இனவாத நம்பிக்கை இன்று அதிகரித்துள்ளது. 'பெரிய மாற்றுக் கோட்பாடு' என்று அழைக்கப்படும் இது, பிரான்ஸின் பிரதான அரசியல் நீரோட்டத்தின் மையமாக உருவெடுத்துள்ளது.

இந்தக் கோட்பாடு, பிரான்ஸ் எழுத்தாளர் ரெனாட் காமுஸால் முன்வைக்கப்பட்டது. அவருடைய 2011 புத்தகம், 'தி கிரேட் ரிப்லேஸ்மென்ட்' இதற்கான அடிப்படைகளை வழங்கியது. அவரது கோட்பாடு அமெரிக்கா உட்பட பிற நாடுகளில் உள்ள வெள்ளை தேசியவாத குழுக்களால் எடுத்துக் கொள்ளப்பட்டது.

'பெரிய மாற்றுக் கோட்பாடு' என்ற சொல்லாடலைப் பொதுத்தளத்தில் பயன்படுத்த முடியாது என்ற நிலை இருந்தது. ஆனால், இம்முறை தேர்தல் பிரசாரங்களில் லு பென், இச்சொல்லாடலை நேரடியாகப் பயன்படுத்தினார்.

பிரான்ஸில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பொன்றில் 60% மான பிரான்ஸ் மக்கள் அளவுக்கதிகமான குடியேற்றவாசிகள் பிரான்ஸில் வசிப்பதாகத் தெரிவித்தனர். 71% மானோர் குடியேற்றவாதிகளால் தீமை விளையும் என்று நினைக்கிறார்கள். இதன் பிரதிபலிப்புகளையே பிரான்ஸ் தேர்தல் முடிவுகளில் கண்டோம்.

அண்மைய இத்தாலிய தேர்தல் முடிவுகள், ஆளும் பிரான்ஸ் அரசியல்வாதிகளிடம் கலக்கத்தையும் அதிவலதிடம் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளன. பல மேற்கு ஐரோப்பிய அதிவலதுசாரி கட்சிகளுக்கு புகலிடமாகவும் ஆதர்சமாகவும் இருப்பது பிரான்ஸ் அதிவலது ஆகும்.

அதேவேளை, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இத்தாலியின் அதிவலதைப் பின்பற்றுகின்றன. பால்கனிலும் பிற இடங்களிலும், சிறுபான்மையினர் மற்றும் அரசியல் எதிரிகளைத் தாக்குவதற்கும் சமூகத்தில் பாசிச சித்தாந்தங்கள் பரவ அனுமதிக்கும் அறிவை உருவாக்குவதற்கும் அதை நோக்கி மக்களை அணிதிரட்டும் பணியையும் தீவிர வலதுசாரிக் குழுக்கள் தொடர்ந்து செய்கின்றன.

உதாரணமாக, அல்பேனிய மற்றும் செர்பிய தீவிர வலதுசாரி குழுக்களும் அவற்றின் தலைவர்களும் பாசிசத்தை ஒரு வரலாற்று நிகழ்வாகவும் சமகால இயக்கமாகவும் எவ்வாறு நிலைநிறுத்திக் கொள்கிறார்கள் என்பதைப் பார்ப்பது பயனுள்ளது. இது இத்தாலியின் அதிவலது எவ்வாறு கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் செல்வாக்குச் செலுத்துகிறது என்பதை விளங்க உதவும்.

அல்பேனியாவில் 'அல்பேனிய மூன்றாம் நிலை' என்பது இத்தாலிய அதிவலது தீவிரவாத அமைப்பான *Terza Posizione* மற்றும் இத்தாலிய அதிவலது கோட்பாட்டாளராகிய *Julius Evola* ஆகியவற்றை ஆதர்சமாகக் கொண்ட ஒரு நவபாசிச அமைப்பாகும். 1944இல் என்வர் ஹோஷாவின் கம்யூனிஸ்ட் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தபோது அடிப்படையில் ஒரே இரவில் அழிக்கப்பட்ட பாசிச சிந்தனை மற்றும் அதிவலதுசாரி அரசியலின் பாரம்பரியத்தை மீண்டும் கண்டுபிடிப்பதே அல்பேனிய மூன்றாம் நிலையின் நோக்கமாகும்.

அல்பேனிய பாசிசக் கட்சி என்பது, முசோலினி ஆட்சி அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர், இத்தாலிய ஆதரவுடன் உருவாக்கப்பட்டது. இன்று தங்களைப் போராளிகள் என்று அழைத்துக்கொள்ளும் அல்பேனிய மூன்றாம் நிலை, ஆட்சி - அதிகாரம் குறித்துக் கரிசனை கொள்வது குறைவு.

அவர்கள் அல்பேனியத் தேசியவாதத்தை, பாசிச இத்தாலியின் கட்டுப்பாட்டில் அல்பேனியா இருந்த காலத்தைய நிழலில் கட்டமைக்கிறார்கள். அல்பேனியா முசோலியின் ஆட்சியதிகாரத்தின் கீழ் இருந்த காலத்தைப் பொற்காலம் என்று வர்ணிப்பதில் தொடங்குகிறார்கள்.

இத்தாலியின் அதிவலதின் எழுச்சி இவர்களுக்குத் தெம்பூட்டும். ஆனால், ஆட்சியதிகாரம் குறித்த அதிக அக்கறை இவர்களுக்கு இல்லை. ஆனால் அதிவலது வன்முறை, இவர்களின் உள்ளார்ந்த பண்பாகவுள்ளது.

*Terza Posizione* அமைப்பின் நிறுவனர்களின் ஒருவரான *Roberto Fiore* கடந்தாண்டு சேர்பியாவில் ஏராளமான பொதுக்கூட்டங்களில் பங்கெடுத்துள்ளார். சேர்பியாவின் அதிவலது கட்சியின் முக்கியமான கிரியா ஊக்கியாக அவர் இருக்கிறார்.

கடந்த ஒக்டோபரில் சேர்பியத் தலைநகர் பெல்கிரேட்டில், ஐரோப்பிய அதிவலதுசாரி கட்சிகள், அமைப்புகள் பலவற்றை இணைத்து, அமைதி மற்றும் சுதந்திரத்துக்கான கூட்டணி (*Alliance for Peace and Freedom*) என்ற பெயரில் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளார். இத்தாலி மற்றும் ஐரோப்பாவின் தற்போதைய அரசியல் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோருக்கு தற்போது விரோதமாக இருக்கும் இத்தாலிய அரசாங்கமும் இத்தாலியின் களநிலைவரமும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாசிஸ்டுகளுக்கு ஒரு புகலிடமாக இருக்கும் பால்கனில் அதிவலதின் எழுச்சிக்கு உத்வேகமாகவும் இத்தாலி இருக்க முடியும்.

ஜேர்மனியில் குடியேற்றவாசிகளுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. கடந்தாண்டு மட்டும் முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிடப்பட்ட 662 குற்றங்கள் பதிவாகியுள்ளன. சிறுபான்மையினரை பலிகடாக்களாக சித்திரிப்பது எளிது. அவர்களே அரசியல் அல்லது பொருளாதார பிரச்சினைகளுக்கு பலிகடாக்கள். தீவிர வலதுசாரி குழுக்கள் இயற்கையாகவே இந்த முறையைப் பயன்படுத்தி, இந்தச் சிறுபான்மையினரே பெரும் பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்று கூறுகின்றனர். எனவே, வளர்ந்து வரும் வலதுசாரி தீவிரவாதத்துக்கும் பொருளாதார நிலைமைக்கும் இடையே ஒரு தொடர்பைக் காண்பது கடினமல்ல.

தீவிர வலதுசாரி இயக்கங்களின் எழுச்சி மற்றும் வளர்ந்து வரும் சமூக சமத்துவமின்மை, பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே விரிவடையும் இடைவெளிகள், அதிகரித்து வரும் பாலின சமத்துவமின்மை மற்றும் இனப்பாகுபாடு ஆகியன ஐரோப்பாவில் அரசியல் வன்முறை மீண்டும் எழுவதற்கு வழிசெய்யும் என்று நாம் எதிர்பார்க்கலாமா? இது குறித்து அடுத்த வாரம் நோக்குவோம்.

## கடிதங்கள்

### வடகாட்டில் காட்டு யானைகளின் தொல்லை



முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு வடகாட்டுப் பகுதியில், காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் பெருமளவான பயிரழிவுகள் ஏற்படுவதாகவும் இப்பகுதி விவசாயிகளும் பொது மக்களும் அச்சமும் கவலையும் தெரிவிக்கின்றனர்.

வடகாட்டு பகுதியில் மக்கள் குடியிருப்புகள், பயிர்ச் செய்கை நிலங்கள் ஆகியவற்றுக்குள், காட்டுயானைகள் தொடர்ச்சியாக உட்புகுந்து, பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன என்றும் மாலை ஆறு மணியாகியதும் ஊர் மனைகளுக்குள் புகும் காட்டு யானைகள், தோட்டப் பயிர்களையும் ஏனைய மா, பலா, தென்னை போன்ற மரங்களையும் அழித்து வருகின்றன.

கடந்த காலங்களில், இவ்வாறாக யானைகள் மக்கள் குடியிருப்புகள், பயிர்ச் செய்கை நிலங்கள் ஆகியவற்றுக்குள் புகுந்து அழிவுகளை ஏற்படுத்தவில்லை என்றும் அண்மைய நாள்களாகவே யானைகளின் வரத்து காணப்படுகின்றது என்றும் வடகாட்டுக் கிராம மக்கள் தெரிவிக்கின்றார்கள். இந்த யானைகள், தென் பகுதியில் இருந்து கொண்டு வந்த வளர்ப்பு யானைகளாகும் என்றும் இரவோடிரவாக இப்பகுதிகளில் இறக்கி விடப்பட்டதாகவும் இப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

–யது பாஸ்கரன்

உணவு விவசாய ஸ்தாபனம்

# விவசாய அமைச்சிடம் யூரியா கையளிப்பு

ஐக்கிய நாடுகளின் மத்திய அவசர நிவாரண நிதியத்தின் (UN-CERF) ஊடாகக் கொள்முதல் செய்யப்பட்ட 780.1 மெட்ரிக் தொன் யூரியாவை, ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய ஸ்தாபனம் (FAO) அண்மையில் விவசாய அமைச்சிடம் கையளித்தது.

வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, பதுளை ஆகிய நான்கு மாவட்டங்களில், அரை ஏக்கருக்குக் குறைவான சிறிய காணிகளில் நெற்செய்கை மேற்கொள்ளும் 15,619 விவசாயிகளுக்கு தலா 50 கிலோ கிராம் வீதம் யூரியா பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் இந்த உரத்தின் விநியோக நடவடிக்கையை விவசாய அமைச்சும் கமநல அபிவிருத்தித் திணைக்களமும் முன்னெடுத்து வருகின்றன.

அடையாளம் காணப்பட்ட மாவட்டங்களில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சமீபத்திய பொருளாதார அதிர்ச்சி, உர வகைகளுக்கான பற்றாக்குறை என்பவற்றிலிருந்து மீட்சிபெற உதவுவதே FAO மேற்கொள்ளும் இந்த முன்முயற்சியின் நோக்கமாகும்.

யூரியா உரத்தைக் கையளிக்கும் வைபவத்தில் பேசிய விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, இலங்கையில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதில் அமைச்சு காட்டும் ஆழ்ந்த அக்கறையை வலியுறுத்தியதோடு, FAO வழங்கும் உதவிக்கு தனது நன்றியை தெரிவித்தார்.

"அவசியமான விவசாய உள்ளீடுகள் நெற்செய்கையாளர்களுக்குக் கிடைக்குமாயின் நாட்டின் உணவுப் பாதுகாப்பை மீண்டும் வழமை நிலைக்குக் கொண்டுவர முடியும். மிகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அத்தியாவசிய உரங்களும் ஏனைய உள்ளீடுகளும் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் நெருங்கிய முறையில் ஒத்துழைப்பதற்காக நான் FAO அமைப்பிற்கு நன்றி கூறுகின்றேன்" என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான FAO பிரதிநிதி விமலேந்திர ஷரன் பேசுகையில், FAO அமைப்புடன் நெருங்கிய ஒத்துழைப்பை மேற்கொள்வதற்காக இலங்கை அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்தார். "FAO என்ற முறையில் நாம் எமது பங்காளிகளுடன் இணைந்து பணியாற்றுவதோடு, எளிதில் பாதிக்கப்படக்கூடிய விவசாயிகளும் மீனவர்களும் தமது வாழ்வாதாரங்களைக் கைவிடும் நிலைக்குத்




தள்ளப்படாமல், தத்தமது குடும்பங்களுக்கு உணவூட்டுவதை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு மட்டத்திலும் பரிந்துரைகளை வழங்குகின்றோம். கையளிக்கப்பட்ட யூரியா உரம், நாட்டின் மிக வறிய மாவட்டங்களில் மோசமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும். அதன் மூலம் அவர்கள் தமது குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்தவும் நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் முடியும்" என்றார்.

இலங்கையில் ஐ.நா வதிவிட இணைப்பாளராகப் பணியாற்றும் ஹனா சிங்கர்-ஹம்டி கூறுகையில், "பொருளாதார நெருக்கடியின் மோசமான தாக்கங்களிலிருந்து இலங்கை மக்களைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கடந்த ஜூன் மாதத்திலிருந்து பல்துறை உதவிகளை வழங்கி வருகின்றது. 3.4 மில்லியன் மக்களை இலக்காகக் கொண்டு சமீபத்தில் மறுசீரமைக்கப்பட்ட மனிதநேய தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் திட்டத்தின் மூலமான உதவிகளும் இதில் உள்ளடங்கும். உள்நாட்டு உணவு உற்பத்தி ஆற்றல் மற்றும் விநியோக அமைப்புகளை இயன்ற அளவுக்கு மேம்படுத்துவதற்கான உதவிகளில் கவனத்தைச் செலுத்துகின்றோம். விவசாய அமைச்சிடம் கையளிக்கப்பட்ட யூரியா உரமானது, பாதிக்கப்பட்டுள்ள வாழ்வாதாரங்களை மீளக் கட்டியெழுப்பவும் அதன் மூலம் இலங்கையில் உயிர்களைக் காப்பாற்றவும் உதவும்" என்று தெரிவித்தார்.

# ஜனவரியில் FACETS Sri Lanka கண்காட்சி

FACETS Sri Lanka கண்காட்சி, இரண்டு வருடகால இடைவெளிக்குப் பின்னர், 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை, கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சி பற்றி விளக்கம் அளிக்கும் செய்தியாளர் மாநாட்டில் இரத்தினக்கல், தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் (NGJA) தவிசாளர் விராஜ் டி சில்வா, ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளர் சுரேஷ் டி மெல், FACETS Sri Lanka வின் தவிசாளர் அல்தாவ் இக்பால், இலங்கை இரத்தினக்கல் ஆபரண சங்கத்தின் (SLGJA) தவிசாளர் அஜ்வாத் டீன் ஆகியோர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டார்கள்.

இதன்போது. இலங்கைக்கு உரித்தான Ceylon Sapphire இரத்தினக் கற்களுக்கு கண்காட்சியில் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றுக் கொடுத்து, இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் பாதையில் FACETS Sri Lanka வை செலுத்துவதற்காக உலகெங்கிலும் இலங்கையின் இரத்தினக்கற்களை பிரபல்யப்படுத்துவதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்ட வழிவகுக்கும் விதத்தில், இலங்கையின் இரத்தினக்கற்கள் துறையை மேம்படுத்தி, 2023ஆம் ஆண்டில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஏற்படுத்திக் கொடுப்பது எனும் தொலைநோக்கு இலக்கைக் கொண்டுள்ளது.

சர்வதேச வர்ண இரத்தினக்கற்கள் சங்கத்தின் பணிப்பாளராகவும் கடமையாற்றும் இக்பால் கருத்து வெளியிடுகையில், "Ceylon Sapphire இன் பிரத்தியேகமான அழகும் மதிப்பும் 2,500 வருடகாலமாக நன்கறியப்பட்டுள்ளதுடன், இவை உலகின் மிகவும் முக்கியமான இரத்தினக்கற்களின் வரிசையில் ஸ்திரமாக பொருத்திக் கொண்டுள்ளன" என்றார்.

SLGJA யின் தவிசாளர் டீன் கருத்து வெளியிடுகையில், FACETS Sri Lanka ஆனது எப்போதும் துறைசார்ந்த முக்கியமான விடயங்களை ஓரிடத்துக்குள் கொண்டு வந்த பிரத்தியேக கண்காட்சியாகுமெனக் குறிப்பிட்டார். "இந்தக் கண்காட்சியின் சிறப்பு அமர்வானது, இலங்கையின் இரத்தினக்கற்களையும், ஆபரணங்களையும் வெறும் கற்களுக்கு அப்பால் கொண்டு சென்று, இலங்கையை உலகின் சிறப்பான தேசமாக உலக வெளியில் கொண்டு செல்கிறது. பண்டைய காலந்தொட்டு 'இரத்தினதுவீபம்' என்றழைக்கப்படும் சிறுதீவில் உள்ள இரத்தினக்கற்கள் புதையல்களை நாம் காட்சிப்படுத்துகிறோம். இது உலகின் எப்பாகத்திலும், எந்த ஆபரணத்துக்கும் விருப்பத்துடன் நாடப்படும் தெரிவாக இலங்கையின் இரத்தினக்கற்கள் மாறுவதை உறுதி செய்யும் முயற்சியின் சிறு ஆரம்பமாகும்" என்றார்.

இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் (SLGJA) என்பது சுரங்க அகழ்வு முதற்கொண்டு தயாரிப்பு ஈறாக, மொத்த மற்றும் சில்லறை விற்பனை வரையலான சகல உபதுறைகளினது நலன்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து பிரதிபலிக்கும் தனியார்த்துறை அமைப்பாகும். இந்த அமைப்பானது, தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபை மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் கரம் கோர்த்து FACETS Sri Lanka கண்காட்சியை ஏற்பாடு செய்கிறமை குறிப்பிடத்தக்கதாகும்.




# FIFA உலக கோப்பையைக் காண 50GB இலவச டேட்டா?

கால்பந்து இரசிகர்களின் மிகுந்த எதிர்ப்பார்ப்புக்கு மத்தியில் FIFA உலகக்கோப்பைத் தொடரானது கடந்த 20 ஆம் திகதி கட்டாரில் கோலாகலமாக ஆரம்பமானது.

டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இத்தொடரில், உலகம் முழுவதிலும் இருந்து 32 நாடுகளின் அணிகள் பங்கேற்றுள்ளன.

இந்நிலையில் 'உலகக்கோப்பைக் கால்பந்துப் போட்டிகளை காண '50 GB டேட்டா இலவசம்' என்ற 'லிங்க்' அண்மைக்காலமாக சமூகவலைத் தளங்களில் உலா வந்தவண்ணம் உள்ளது.

மேலும், 'இந்த லிங்கை பலருக்குப் பகிர்ந்தால், உங்களுக்கு 50 ஜிபி 'டேட்டா' இலவசமாகக் கிடைக்கும்' என அதில் குறிப்பிடப்பட்டிருப்பதால் பலரும் அதனை நம்பி அச்செய்தியை




வெகுவாகப் பரப்பி வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த லிங்கை திறக்கவோ, அல்லது அதனைப் பகிரவோ வேண்டாம் எனவும்,அவ்வாறு செய்தால் உங்களது அலைபேசி 'ஹேக்' செய்யப்பட வாய்ப்பு உள்ளது எனவும் பொதுமக்களுக்கு சைபர் கிரைம் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மத்திரப் பிரதேசம்

# 'குரங்குப் பையன்'

மத்தியப் பிரதேச மாநிலம், நந்த்லேடா கிராமத்தைச் சேர்ந்த லலித் என்ற இளைஞர், தனது ஆறு வயதிலிருந்தே 'ஹைபர்டிரிகோசிஸ்' என்ற நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.



'ஹைபர்டிரிகோசிஸ்' எனப்படுவது மனித உடற்பாகங்களில் அளவுக்கு அதிகமாக முடி வளர்வது ஆகும். இதனை இரண்டு வகைகளாக வகைப்படுத்துகின்றனர். முதல்வகை, உடல் முழுவதும் அதிகமான முடி வளர்வதாகும். இரண்டாவது வகை, சில குறிப்பிட்ட இடங்களைத் தவிர்த்து ஏனைய பாகங்களில் அதிகமான முடி வளர்வதாகும்.

அந்தவகையில், லலித்தின் உடல் முழுவதும் முடி எக்கச்சக்கமாக வளர்ந்துள்ளது. இதுகுறித்து லலித் கூறுகையில், "பாடசாலையில் சக மாணவர்கள் என்னைக் 'குரங்குப் பையன்' என்று அழைக்கிறார்கள். அவர்களை நான் கடிப்பேன் என்று பயப்படுவதாகவும் கூறுகின்றனர். சிறு குழந்தைகள் என்னைக் கண்டால் பயப்படுவார்கள். நான் ஒரு சாதாரண குடும்பத்தில் இருந்து வருகிறேன். என் தந்தை ஒரு விவசாயி. நான் தற்போது 12 ஆம் தரத்தில் கல்வி கற்று வருகின்றேன். அதே நேரத்தில் எனது தந்தையின் விவசாய வேலைகளில் உதவுகின்றேன்" எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், "உலகில் 50 பேர் மாத்திரமே, இவ்வகை அரிய வகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். சாதாரண மனிதர்களில் இருந்து நான் வித்தியாசமானவன்; தனித்துவமானவன். ஆனால் பெரும்பாலான நேரங்களில் நமது வேறுபாடுகள்தான் நம்முடைய மிகப்பெரிய பலம்; நான் நானாக இருப்பதில் பெருமைப்படுகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.



மத்திய பிரதேசம்

# நடைபயணத்தில் இணைந்தார் பிரியங்கா

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, 'இந்திய ஒற்றுமை பயணம்' என்ற பெயரில் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை பாதயாத்திரை மேற்கொண்டு வருகின்றார்.

கடந்த செப்டெம்பர் 7ஆம் திகதி கன்னியாகுமரியில் இப்பாதயாத்திரையைத் தொடங்கிய அவர், தற்போது கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா வழியாக மராட்டிய மாநிலத்தை அடைந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று (24) இவ்யாத்திரையில் ராகுல் காந்தியுடன், காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, அவரது கணவர் ரோபர்ட் வத்ரா ஆகியோர் இணைந்து கொண்டனர்.

மேலும், பிரியங்கா காந்தியின் மகன் ரைஹான் வத்ராவும் இவ்யாத்திரையில் இணைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



சென்னை

# வைத்தியசாலையில் கமல்ஹாசன்



நடிகர் கமல்ஹாசன் 'இந்தியன்-2' திரைப்படப் படப்பிடிப்பில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார். இதற்கிடையில் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிலும், தனது கட்சி பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் (23) இரவு அவருக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து அவர் சென்னை, போரூரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு வைத்தியர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்நிலையில், 'காய்ச்சல் காரணமாக போரூர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் நலமாக உள்ளார். விரைவில் வீடு திரும்புவார்' என மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஆந்திரா

# எம்.ஜி.ஆரும் நானும் ஒன்று



ஆந்திராவின் முதலமைச்சர் ஜெகன்மோகன் ரெட்டி, அண்மையில் திரையுலக ஜாம்பவான்களும் அரசியல் தலைவர்களுமான எம்.ஜி.ஆர் மற்றும் என்.டி.ஆருடன் தன்னை ஒப்பிட்டுப்பேசியுள்ளார்.

ஸ்ரீகாகுளத்தில் புதன்கிழமை (23) நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "சுயமாக அரசியல் கட்சியை தொடங்கி, சொந்தப் பலத்தில் ஆட்சிக்கு வந்தவர்கள் யாரென்றால், எம்.ஜி.ஆர், என்.டி.ஆர் அல்லது என்னைக் குறிப்பிடுவார்கள்.

அதேசமயம், மாமனாரிடமிருந்து கட்சியையும் முதலமைச்சர் கதிரையையும் அபகரித்தவர் யாரென்றால், சந்திரபாபு நாயுடுவைக் கூறுவார்கள். அவர் ஆட்சி அதிகாரத்துக்காக தனது மாமனாரின் முதுகில் குத்தியவர். தேர்தல்களின்போது பொய்யான வாக்குறுதிகளை அளித்து, மக்களை ஏமாற்றியவர்.

வாக்குறுதிகளை தலைவர்கள் நிறைவேற்றும்போதுதான் உண்மையான ஜனநாயகம் நிலைநாட்டப்படும். அப்படியல்லாத ஒரு தலைவருக்கு மீண்டும் வாய்ப்பளித்தால், அது மக்களை வீழ்ச்சியில் தள்ளிவிடும். முதுகில் குத்தும் ஒருவருக்கு மக்கள் மீண்டும் வாய்ப்பளிக்கமாட்டார்கள்" என்றார்.

இந்நிலையில் அவரது கருத்தானது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக, "ஆந்திராவில் 2024ஆம் ஆண்டு நடைபெறும் பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைக்காவிட்டால், அதுவே எனது கடைசி தேர்தலாக இருக்கும்" என்று சந்திரபாபு நாயுடு அண்மையில் பொதுமக்கள் மத்தியில் உணர்ச்சிபூர்வமாக பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



சீனா

# மீண்டும் பொது முடக்கம்?

## அச்சத்தில் உலக நாடுகள்




சீனாவில் அண்மைக்காலமாகக் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் சீனாவில் மீண்டும் புதிய வகை வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாகவும், இத்தொற்றின் காரணமாக ஒரே நாளில் 31,354 பேர் வரை பாதிப்படைந்துள்ளனர் எனவும் திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது,

இதன் காரணமாக ஊரடங்கு, பயணக் கட்டுப்பாடுகள், பெரிய அளவில் சோதனை போன்ற பல்வேறு கட்டுப்பாடுகள் சீனாவில் விதிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இப்புதிய தொற்றானது தமது நாடுகளுக்கும் பரவுமோ என்ற அச்சம் உலக நாடுகளிடையே ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மீண்டும் பொது முடக்கம் மற்றும் வீட்டில் இருந்து வேலை போன்ற கட்டுப்பாடுகள் வருமோ என மக்கள் அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்கா

# 17 வருடங்களாக தாடியுடன் வாழும் பெண்

அமெரிக்காவின், லாஸ் வேகாஸ் நகரைச் சேர்ந்த பெண்ணொருவர் சுமார் 17 வருடங்களாக முகத்தில் தாடியுடன் வாழ்ந்து வருகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

டகோடா கோக் ( Dakota cooke) என்ற 30 வயதான பெண்ணே சுமார் 17 வருடங்களாக இப் பிரச்சனைக்கு முகம் கொடுத்து வருகின்றார்.

டகோடா தனது 13 ஆவது வயது முதல், முகத்தில் அசாதாரணமாக முடி வளர்வதைக் கவனித்துள்ளார் .இதனால் சுமார் பத்து வருடங்களாக மனவுளைச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார் எனக் கூறப்படுகின்றது.

இது குறித்து டகோடா கருத்துத் தெரிவிக்கையில் "நான் வளர்ந்த காலத்தில், பெண்களுக்கு முகத்தில் முடி வளர்வது தவறான கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டது.

இதனால் நான் சலூன்களுக்கு சவரம் செய்யச் சென்றால், பெண்கள் அங்கு வரக்கூடாது என்றும், பெண்கள் முகத்தில் முடி வளர்த்துக்கொள்ள கூடாது என்றும் அறிவுரை கூறுவார்கள்"இதனால் ஒரு நாளைக்கு இரு முறை சவரம் செய்துகொள்ள தொடங்கினேன். அத்துடன் இதனால், முகத்தில் ஏற்படும் காயங்களை மறைக்க மேக் அப் செய்துகொள்வேன்.


இதுகுறித்து நான் மருத்துவர்களை நாடிய போது அவர்கள் 'எனது உடலில் அட்ரீனல் சுரப்பிகள் அதிக அளவில் டெஸ்டோஸ்டிரோன் உற்பத்தி செய்வதால், இந்த பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம்' எனத் தெரிவித்தனர்.

இந்நிலையில் கடந்த 2015ஆம் ஆண்டும் தாடியுடன் ஒரு நிகழ்ச்சியில் தோன்றினேன். அதன் பின்னர் சவரம் செய்து கொள்வதையும், வேக்சிங் செய்து கொள்வதையும் படிப்படியாக கைவிட்டுவிட்டேன்.

ஒரு கட்டத்தில் தனது இந்த நிலையை மனதார ஏற்றுக்கொள்ளவும் தொடங்கிவிட்டேன். இதற்கு எனது "குடும்பத்தினரும், நண்பர்களும் ஆறுதலாக நின்றனர்" என்றார்.

அமெரிக்கா

# இப்படியும் ஒரு சமிக்ஞையா?



எம்மில் பெரும்பாலானோர் வீதிகளில் செல்லும் போது கூட தொலைபேசியினைப் பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளோம். இதனால் வீதி விபத்துக்களும் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் இவ்வாறான விபத்துக்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் வகையில் தென்கொரிய அரசு வீதிகளின் ஓரம் இருக்கும் நடைப்பாதையில் விளக்குகளை அமைத்துள்ளனர். 'வீதியில் நடந்து செல்பவர்கள் பலரும் தொலைபேசியைப் பார்த்துக்கொண்டே நடப்பதால், போக்குவரத்துச் சமிக்ஞைகளை கவனிக்கத் தவறுவதாகவும் இதனைக் கருத்தில் கொண்டே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் வாகனங்கள் வரும் போது சிவப்பு நிறத்திலும், சாலையை கடக்க தயாராகும்போது பச்சை நிறத்திலும் இந்த விளக்குகள் மாறும். மேலும், தொபேசியைப் பார்த்துக்கொண்டே, வாகனங்களை கவனிக்காமல் மக்கள் சாலையில் நடக்க முற்பட்டால், அவர்களது தொலைபேசிக்கு சிக்னல் அனுப்பும் வசதியும் அறிமுகப்பட்டுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தென் கொரிய போக்குவரத்து துறையின் இந் நடவடிக்கைக்கு பலரும் பாராட்டுத் தெரிவித்து வருகின்றனர்.

அமெரிக்கா

# உலகிலேயே வயதான குழந்தைகள்

அமெரிக்காவைச் சேர்ந்த ரேச்சல் மற்றும் பிலிப் ரிட்ஜ்வே என்ற தம்பதியினர், சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் பதப்படுத்தப்பட்ட கருமுட்டைகளிலிருந்து இரட்டை குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் ஒரேகான் மாகாணத்தை சேர்ந்த குறித்த தம்பதியினருக்கு 8, 6, 3 மற்றும் 2 வயதுடைய நான்கு குழந்தைகள் உள்ளனர்.

இந்நிலையில் 1992 ஆம் ஆண்டு ரேச்சல் நாக்ஸ்வில்லியில் உள்ள தேசிய கரு தான மையத்திற்கு (NEDC) தனது கருக்களை தானமாக வழங்கியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அந்தவகையில் 30



வருடங்களுக்குப் பின்னர் குறித்த கருவைப் பயன்படுத்தி அவர்கள் மீண்டும் செயற்கை முறை கருத்தரித்தல் மூலம் வெற்றிகரமாக லிடியா , திமோதி ரிட்ஜ்வே என்ற இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளனர்.

இது குறித்து பிலிப் ரிட்ஜ்வே கருத்துத் தெரிவிக்கையில், "நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளோம். இவர்கள் சிறிய குழந்தைகளாக இருந்தாலும், எங்கள் மூத்த குழந்தைகள்" என்றார்.

சீனா

# ஐபோன் தொழிற்சாலையில் ஊழியர்கள் போராட்டம்

கொரோனாக் கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சீனாவில் உள்ள மிகப்பெரிய ஐபோன் தொழிற்சாலையில் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்திய சீனாவில் உள்ள செங்சவு மாகாணத்தில் கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக தீவிர கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, அங்கு அமைந்துள்ள மிகப்பெரிய ஐபோன் தயாரிப்பு நிறுவனமான



ஃபாக்ஸ்கான் தொழிற்சாலையில் பணிபுரியும் 2 லட்சம் ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேசமயம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஊழியர்கள் தமக்கு முறையான ஊதியம் வழங்கவில்லை எனவும் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இந்நிலையில், தனிமைப்படுத்தப்பட்டுள்ள இடத்தில் இருந்த காவலர்களை தள்ளிவிட்டு வெளியே வந்த ஊழியர்கள் நேற்று முன்தினம் (23) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உலகக் கிண்ணம்

# ஜப்பானிடம் தோற்ற ஜேர்மனி



கட்டாரில் நடைபெற்று வரும் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில், நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஜப்பான் உடனான குழு ஈ போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி தோற்றது.

ஜேர்மனி சார்பாகப் பெறப்பட்ட கோலை இல்கி குன்டோகன் பெற்றதோடு, ஜப்பான் சார்பாக, றிட்சு டோான், தகுமா அஸானோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, மொராக்கோ, குரோஷியாவுக்கிடையிலான குழு எஃப் போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.


இந்நிலையில், நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொஸ்டா றிக்காவுடனான போட்டியில் 7-0 என்ற கோல் கணக்கில் ஸ்பெய்ன் வென்றது. ஸ்பெய்ன் சார்பாக, பெரன் டொரஸ் ஆகியோர் தலா இரண்டு கோல்களையும், டனி ஒல்மோ, மார்கோ அஸென்ஸியோ, கவி, கார்லோஸ் சொலர், அல்வரோ மொராட்டா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, நேற்று அதிகாலை நடைபெற்ற கனடாவுடனான குழு எஃப் போட்டியில், மிச்சி பச்சுவாய் பெற்ற கோலுடன் 1-0 என்ற கோல் கணக்கில் பெல்ஜியம் வென்றது.

இந்நிலையில், இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு பி போட்டியில் வேல்ஸும், ஈரானும் மோதவுள்ளதுடன், மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஏ போட்டியில் கட்டாரும், செனகலும் மோதவுள்ளதுடன், இரவு 9.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நெதர்லாந்தும், ஈக்குவடோரும் மோதவுள்ளன. தவிர, நாளை அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு பி போட்டியில் ஐக்கிய அமெரிக்காவை இங்கிலாந்து எதிர்கொள்கிறது.

# கருணாரத்னவுக்கு ஓராண்டு

## ஒத்திவைக்கப்பட்ட தடை



இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறைவீரரான சாமிக கருணாரத்னவுக்கு, இலங்கை கிரிக்கெட் சபையால் ஒத்தி வைக்கப்பட்ட ஓராண்டுத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வீரர் ஒப்பந்தத்தை மீறியதாக ஒழுக்க விசாரணையொன்றில் குற்றஞ்சாட்டப்பட்டதையடுத்தே இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கருணாரத்னவுக்கு 5,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் அபராதமும், குற்றத்தை ஒப்புக் கொண்டமையையடுத்து வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இன்று பல்லேகலவில் ஆரம்பிக்கவுள்ள ஆப்கானிஸ்தானுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கைக் குழாமில் கருணாரத்ன தெரிவு செய்யப்படவில்லை எனத் தெரிகிறது.



# அதிபரின் ஆசிகளுடன் ஆரம்பமானது புத்தளம்

## ஸெபக்தக்ரோ வீரர்களின் பயணம்

எம்.யூ.எம். சனூன்

பங்களாதேஷில் அடுத்த மாதம் நடைபெறும் நான்காவது தெற்காசிய ஸெபக்தக்ரோ சம்பின்ஷிப் போட்டி 2022 இல் பங்கேற்கும் இலங்கை ஸெபக்தக்ரோ அணிக்கு புத்தளத்தைச் சேர்ந்த ஸெபக்தக்ரோ வீரர்கள் மூன்று பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக Amateur SepaktakrawAssociation of Sri Lanka (ASTASL) அனுப்பிவைத்த உத்தியோகபூர்வ கடிதம் சாஹிரா தேசிய கல்லூரியின் அதிபர் ஐ.ஏ. நஜீம் அவர்களின் பார்வைக்கு வழங்கப்பட்டது.

இலங்கை ஸெபக்தக்ரோ அணிக்குத் தெரிவுசெய்யப்பட்ட வீரர்களான சகீ அஹமட் அம்ஜுதீன், அதீப் ஹஸன், அஸ்ஹார் ஹுஸைன் (இரட்டை சகோதரன்கள்) சாஹிராவின் பழைய மாணவர்களாவர். புத்தளம் ஸெபக்தக்ரோ விளையாட்டுக் கழகத்தின் ஆட்ட வீரர்களான இவர்கள், அகில இலங்கை ஸெபக்தக்ரோ சுற்றுப்போட்டி 2022 இல் சாம்பியன் கிண்ணத்தை வெற்றியீட்டினார்கள்.

மேற்படி உத்தியோகபூர்வ கடிதம் பார்வைக்கு வழங்கப்பட்டபோது தனது தனிப்பட்ட மகிழ்ச்சியையும் பாடசாலை சார்பில் வாழ்த்துகளையும் தெரிவித்த அதிபர் நஜீம், மேலதிக ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் பங்களாதேஷ் பயணத்துக்கான செலவுகளை ஈடுசெய்வதற்கு பாடசாலை மட்டங்களில் நிதியுதவியை பெற்றுத் தருவதாகவும் தெரிவித்தார்.

நியூசிலாந்து எதிர் இந்தியா

# ஒருநாள் தொடர் இன்று ஆரம்பம்

நியூசிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது, ஒக்லன்டில் இன்று காலை 7 மணிக்கு ஆரம்பிக்கின்றது. உலகக் கிண்ணமானது அடுத்தாண்டு நடைபெறவுள்ள நிலையில், இரண்டு அணிகளும் தமது குழாம்களை பலப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பாக இத்தொடர் கருதப்படுகிறது.

இந்திய அணியைப் பொறுத்தவரையில் பதிலணித்தலைவர் ஷீகர் தவான் ஓட்டங்களைப் பெறுவது அவசியமென்பதுடன், றிஷப் பண்டிடமிருந்தும் ஓட்டங்கள் எதிர்பார்க்கப்படுகிறது. தவிர, இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில் வாய்ப்புப் பெறாத சஞ்சு சாம்ஸன், குல்தீப் யாதவ், உம்ரான் மலிக் போன்றோருக்கு இத்தொடரில் வாய்ப்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக நியூசிலாந்தைப் பொறுத்தவரையில், ஜேம்ஸ் நீஷமிடமிருந்து சகலதுறையிலும் மேம்பட்ட பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுகின்றது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 25 நவம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.